

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்

திரு **அ. செல்வம் அடைக்கலநாதன்** அவர்கள்

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.....

**தீர்வுத் திட்டத்தை.....**

**அவசரகாலச் சட்டத்தை.....**

**பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை....**

# ஏன் நிராகரிக்கின்றோம்?

# அ.அடைக்கலநாதன்

**10.09.1998**

**கௌரவ குழுக்களின்** பிரதித் தவிசாளர் அவர்களே, இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையில், அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்காக, இங்கு எழுந்து நிற்கின்றேன். சுயமரியாதை கொண்ட ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையும் இந்த அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதை எதிர்க்கின்றான் என்பதை நான் சொல்லி வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்து கொண்டிருக்கும் போரினை மேலும் தொடர்ந்து நடாத்துவதற்கு, அவசரகாலச் சட்ட நீடிப்பு அரசாங்கத்திற்குத் தேவைப்படுகின்றது. ஆனால், தமிழ்த் தேசிய இனம் இந்தப் போரினை எதிர்க்கின்றது. எனவே தான், எமது இனத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்த அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதை நான் எதிர்க்கின்றேன். நான் சார்ந்த ரெலோ இயக்கமும் எதிர்க்கின்றது.

நான்கு வருட கால இடைவெளிக்குப் பிறகு, எனது கட்சி ஓர் உறுப்பினருடன் இந்தச் சபைக்குள் மீண்டும் பிரவேசித்திருக்கின்றது. ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகப் **போரிட்டு வீர மரணம் அடைந்த மாவீரன் பண்டார வன்னியனைப் பெற்றெடுத்த வன்னி மண்ணின் சார்பிலே மாண்புமிக்க** இந்தச் சபைக்கு வந்திருக்கும் நான், எனது இனத்தின் சார்பில் உண்மையாகவும் நேர்மையாகவும் பேச விரும்புகின்றேன். எமது தமிழ் இனம் போரை வெறுக்கின்றது, போரை எதிர்க்கின்றது. ஆனால், நீதியான அரசியல் தீர்வையும் நிரந்தரச் சமாதானத்தையும் எமது மக்கள் கோருகின்றார்கள். இனப்பிரச்சினைக்குப் போர் மூலம் தீர்வைக் காண முடியாது, போரினால் அமைதியைக் கொண்டு வர முடியாது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி, அரசியல் தீர்வே. அரசியல் தீர்வைக் காண வேண்டுமானால், போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும். ஆனால், அரசாங்கம் அரசியல் தீர்வு பற்றியும் சமாதானம் பற்றியும்

அலங்காரமாகப் பேசிக்கொண்டு, ஆக்ரோஷமாகப் போரை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த இரட்டை வேஷத்தை எமது மக்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள்; அனுபவ ரீதியாகத் தினமும் உணர்கின்றார்கள். அவசரகாலச் சட்டத்தின் கீழ் எமது மக்கள் புழுக்களாகவும் பூச்சி-களாகவும் மதிக்கப்படுகின்றார்கள்; தினமும் மிதிக்கப்படுகின்றார்கள். அரசாங்கம் அறிவித்திருக்கும் அரைகுறையான அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி எமது மக்கள் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. போர் நிறுத்தப்பட்டு, புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்; பேச்சுவார்த்தை மூலம் சமரசத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றே எமது மக்கள் எதிர்ப்பார்க்கின்றார்கள். இதனை அரசாங்கம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். போரின் மூலம் தாம் எதையும் சாதிக்கப்போவதில்லை என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த 40 மாதங்களாகப் போரிட்டு அரசாங்கம் சாதித்தது என்ன? விலை மதிப்பற்ற பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்று குவித்ததைத் தவிர போர் எதனைச் சாதித்துள்ளது? 'யாழ்ப்பாணக்குடாநாட்டைப் பிடித்து விட்டோம்' என்று அரசாங்கம் வெற்றிவிழா கொண்டாடியது. ஆனால், புலிகள் இயக்கத்தினரைத் தோற்கடிக்க முடிந்ததா? கிழக்கிலே நிலைமை என்ன? வன்னியிலே நிலை என்ன? உண்மையை இனியாவது சொல்ல முடியுமா? இனியாவது கனவுலகத்திலிருந்து நிஜ உலகத்திற்கு அரசாங்கம் வர வேண்டும். அரசியல் நீதி எமது மக்களுக்கு மறுக்கப்படுகின்றது என்று தமிழ் இளைஞர்களும் தமிழ் யுவதிகளும் உணர்ந்து கொண்டிருக்கும் வரையில், புலிகள் இயக்கம் பலவீனம் அடையாது என்பதை அரசாங்கம் இனியாவது உணர வேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை மதித்து, அரசியல் தீர்வைக் காண்பதற்கு இனியாவது அரசாங்கம் முன் வர வேண்டும். போரை ஒருபுறம் நடாத்திக் கொண்டு மறுபுறத்தில் அரை குறையான அரசியல் தீர்வை எமது இனத்தின் மீது திணிக்கலாம் என்று நினைத்தால், அது வெறும் கனவே என்பதை

நான் கூறிவைக்க விரும்புகின்றேன். இதனை எமது கட்சி புதிதாகச் சொல்லவில்லை. கடந்த பாராளுமன்றத்திலும் இதனையே எமது கட்சி திட்டவட்டமாகக் கூறியது. இப்போது நாம் மீண்டும் சபையில் கூறுகின்றோம்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! சுதந்திர இலங்கையின் வரலாற்றில் எமது இனம் அடிபணிய மறுத்தே வந்துள்ளது. எமது தலைவர்களில் சிலர் கடந்த காலங்களில் எமது மக்களைக் கைவிட்டு விட்டார்கள். வேறு சிலர் காட்டிக் கொடுத்தார்கள். பொன்னம்பலங்களும் நடேசபிள்ளைகளும் குமாரசாமிகளும் நல்லையாக்களும் எதிர்மன்னசிங்கங்களும் அருளம்பலங்களும் துரையப்பாக்களும் தியாகராசாக்களும் எமது மக்களின் முதுகில் குத்தினார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் எமது மக்களால் தூக்கியெறியப்பட்டார்கள். தலைவர்கள் சிலர் விலை போனாலும், எமது மக்களின் நிலை மாறவில்லை.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! இன்று எமது இனம் அழிந்து கொண்டு இருக்கின்றது. ஆனால், அடிபணிய மறுக்கின்றது. எமது மக்களை நாம் ஒரு போதும் கைவிட முடியாது; கைவிடவும் மாட்டோம். எமது வாழ்வும் தாழ்வும் எமது மக்களுடன்தான். எனவே தான் இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பை எமது இனத்தின் சார்பில் நான் எதிர்க்கின்றேன்; எதிர்த்து நிற்கின்றேன். நன்றி.

## 09.10.1998

**கௌரவ பிரதிச் சபாநாயகர்** அவர்களே! அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதை நான் சார்ந்திருக்கும் 'ரெலோ' இயக்கத்தின் சார்பில், தொடர்ந்து எதிர்த்து நிற்கின்றேன். தொடரும் போரின் கோரப்பிடிக்குள் சிக்கித் திணறும் தமிழ்த் தேசிய இனம். அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதை எதிர்க்கின்றது. சமாதானத்தையும் சகஜ நிலைமையையும் நாடி நிற்கின்றது என்பதில் எவருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. இன்று எமது மக்கள் அனுபவித்துக்

கொண்டிருக்கும் அத்தனை துன்பங்களும் துயரங்களும் இந்த அநியாயமான அவசரகால நிலைமையினால்தான் நியாயப்படுத்தப்-படுகின்றன. எனவே, இந்த விவாதத்தில் எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் சில நிமிட நேரத்தில் எமது மக்களின் இதயக் குமுறல்களை எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! இன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருப்பவர்களுக்கான உலருணவு நிவாரண உதவி நிறுத்தப்பட்டிருப்பது நியாயமானதா என்று அரசாங்கத்தை நான் கேட்க விரும்புகின்றேன். இந்த இரண்டு மாவட்டங்களினதும் அரசாங்க அதிபர்களால் வழங்கப்படுகின்ற புள்ளி விபரங்கள், புலிகள் இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையோ, பொய்யோ, எதுவாகவிருந்தாலும் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த இரண்டு மாவட்ட மக்களினதும் வயிற்றிலடிப்பது மிகவும் கொடுமையானது. அரசின் இந்த நடவடிக்கையையும் ஒருவித பயங்கரவாதமென்றே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

"சமீபத்தில் 'லயன் எயார்' விமானம் வீழ்த்தப்பட்ட கொடுமையான சம்பவத்தில் பலியான பொதுமக்கள் அனைவரும் தமிழர்களே" என்று அரசாங்கப் பத்திரிகைகளான 'ஏரிக்கரை' ஏடுகள் தெரிவித்திருந்தன. கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மீட்பதில் அரசாங்கம் எவ்வித அக்கறையையும் காட்டவில்லை. அரசாங்கம் நினைத்திருந்தால் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இந்தச் சடலங்களை மீட்டிருக்க முடியும். விமானிகள் மற்றும் விமானச் சிப்பந்திகளைத் தவிர, கொல்லப்பட்ட பொதுமக்கள் அனைவரும் தமிழர்களென்பதுதான் அரசாங்கம் காட்டிய அசிரத்தைக்கும் அக்கறையீனத்துக்கும் காரணமாகும் என்று நான் கருதுகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! செம்மணிப் புதைகுழிகள் பற்றிய விவகாரத்தில் இன்று என்ன நடந்து கொண்டிருக்கின்றது? இந்த விவகாரம் வெளியானபோது, விசாரணை

நடத்தப்போவதாக அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு செம்மணிப் புதைகுழிகள் பற்றிய விவகாரத்தை ஆராயத் தலைப்பட்டபோது, ஐக்கிய நாடுகள் சபையின் வெளிநாட்டு உதவியுடன் வல்லுனர்களை வரவழைத்துப் புதைகுழிகளைத் தோண்டுவதில் ஆர்வம் காட்டுவதுபோல அரசாங்கம் நடந்துகொண்டது. ஆனால், இன்றுவரையில் உண்மையில் நடந்திருப்பது என்ன? இந்தப் புதைகுழிகளெல்லாம் இரவோடிரவாகத் தோண்டப்பட்டு, எலும்புக் கூடுகள் அனைத்தும் அகற்றப்பட்டு, அழிக்கப்பட்டிருப்பதாக நம்பகமான செய்திகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகியுள்ளன. புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணக்குடாநாட்டை அரசாங்கப் படைகள் கைப்பற்றிய பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாமைப் புலிகள் இயக்கம் தாக்கியழித்ததையடுத்து, யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணாமற் போன அறுநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்களுக்கு உண்மையில் என்ன நடந்ததென்பதை அனைவரும் அறிவர். செம்மணிப் புதைகுழிகள் மூலம் இந்தப் படுகொலைகள் பகிரங்கமாக நிரூபிக்கப்படுவதை அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்பது, இப்பொழுது திட்டவட்டமாகவும், வெளிப்படையாகவும் தெரிகின்றது. பாடசாலை மாணவி கிருஷாந்தி கொலை வழக்கை வைத்து மனித உரிமைகளை மதிப்பதுபோல் சர்வதேச அரங்கில் பிரசாரம் நடத்திய அரசாங்கம், செம்மணிப் புதைகுழிகள் விடயத்தில் உண்மையை வெளிக்காட்டுவதற்கு ஏன் தயங்குகிறது? நான் இதுவரை கூறிய விடயங்கள் இந்த நாட்டுத் தமிழினத்தின் இன்றைய நிலைமை என்ன என்பதற்கு மிகவும் அப்பட்டமான உதாரணங்கள் என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! திருகோணமலை நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பொதுச்சந்தையை கடந்த ஒரு வருட காலமாகத் திறக்க விடாமல் அரசாங்கம் தடை போடுவது நியாயம் தானா? அப்பட்டமான இனவெறி நடவடிக்கை இது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். மன்னார் மாவட்டத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள நானாட்டான் மற்றும் அதனை உள்ளடக்கிய கிராமங்களில் விளக்கு எரிப்பதற்கு மண்ணெண்ணெய் கிடையாது. மெழுகுதிரியையும் மாட்டுக் கொழுப்பையும் பாவித்து விளக்கெரித்து

அந்த வெளிச்சத்தை நம்பி அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் காலங்கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மண்ணெண்ணெய் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது. மன்னார் செயலகத்திலுள்ள அரசாங்க ஊழியர்கள் கூட, கடமையின் நிமித்தம் மன்னார்த் தீவுக்கு வெளியேயுள்ள அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களுக்குப் போவதற்கும் 'பாஸ்' பெறவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அடுத்ததாக இன்னுமொரு விடயம், மன்னார் - கொழும்பு பிரதான வீதியில் பொதுமக்களின் வாகனங்களை தமது வாகனங்களுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் போகவிட்டு, படையினர் இடையிலே செல்லும் ஒரு கொடுமை அங்கே நிகழ்கிறது. பொது மக்களைக் கேடயமாக வைத்துப் படையினர் பாதைகளைப் பயன்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலை அங்கு உருவாகியுள்ளது. மன்னாரில் கடற்றொழிலை மட்டும் நம்பியிருக்கும் மீனவர்கள் கரையிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரம் வரை சென்று அதுவும் பகலில் மாத்திரம் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த அவலநிலை அவசரகால நிலைமையின் கீழ்தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. யுத்தத்தை வெறுக்கும் எமது மக்கள், இந்த அவசரகால நிலைமையையும் வெறுக்கிறார்கள். எமது மக்களின் சார்பில் இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பு உட்பட, தொடரும் போருடன் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் நாம் எதிர்க்கிறோம். தொடர்ந்தும் எதிர்ப்போம் என்று கூறிக்கொண்டு, எனக்கு இன்று பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு உங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**06.11.1998**

கௌரவ தலைவர் அவர்களே! இந்த அவசரகாலச் சட்ட நீடிப்புக்கான பிரேரணையை எதிர்ப்பதற்காக நான் எழுந்து நிற்கின்றேன். இந்தப் போரினால் எமது மக்கள் தொடர்ந்தும் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த சண்டையினால் எமது மக்கள் தங்களுடைய பெறுமதிவாய்ந்த உயிர்களையும் இழக்கின்ற

ஒரு சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இங்கேயுள்ள ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் எமது மக்களின் நலன்களைப் பற்றி ஒரு துளியளவு கூட நினைத்துப் பார்க்காததையிட்டு நான் மிகவும் வேதனையடைகின்றேன். இந்த நாட்டில் நடைபெறும் சண்டையை நிறுத்துவதற்காக, இங்கே எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நிறுத்துவதற்காக ஒரு பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு காலத்தைக் கடத்தாமல் ஒரு நியாயமான தீர்வை எங்கள் தமிழ் மக்கள் முன் அரசாங்கம் வைக்க வேண்டும். இங்கேயுள்ள ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எமது மக்களின் பிரச்சினையைப் பற்றி அவை துளிகூடச் சிந்திக்காமல் இருப்பதோடு, அக்கட்சியினரில் யாருமே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவில்லையென்பதுதான் மிகுந்த கவலையளிக்கின்றது.

இங்கிருக்கின்ற இருசாராரும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையாக எங்களுடைய இனத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற ஒரு தீர்வை முன்வைப்பார்களாயின், நிச்சயமாக அந்தத் தீர்வை எமது மக்கள் ஏற்றுக்கொள்வார்களென்பது மறுக்க முடியாத உண்மையாகவிருக்கும். ஆனால், இங்கே பார்க்கும்போது, இருபகுதியினரும் ஒருவர் மீது மற்றவர் குறைகளைத்தான் கூறுகின்றனரே தவிர, எங்களுடைய மக்களின் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதையிட்டு ஆராய மறுப்பவர்களாகவே இருக்கின்றனர். எனவே, இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றுசேர்ந்து எமது மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நியாயமான, நீதியான தீர்வை முன்வைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

வடக்கு - கிழக்கிலும் சரி, கொழும்பிலும் சரி எமது இளைஞர்களும், யுவதிகளும் ஏன்? வயோதிபர்களும் கூட புலிகளென்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகின்றார்கள். அவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களை நிரபராதிகளென்று கண்டு விடுதலை செய்வதற்குக் கூட மூன்று மாதங்களாகின்றன. அவர்களைத் தடையுத்தரவின் கீழ் மூன்று மாதங்கள் வரை சிறையில்

அடைக்கின்றார்கள். மூன்று மாதங்களின் பின்னர்தான் அவர்கள் நிரபராதிகளென்று சொல்லப்படுகின்றார்கள்; விடுதலை செய்யப்-படுகின்றார்கள். இந்த அவலைநிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் போர் எங்களுடைய மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை அளிக்கப்போவதில்லை. நான் ஒன்றை மட்டும் சொல்லுகின்றேன். அதாவது, இந்தப் போர் தொடருமாகவிருந்தால், இந்தப் போரை நீங்கள் தொடர்ந்து நடத்துவீர்களாக இருந்தால் எமது மக்கள் தவிர்க்க முடியாமல் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து போராடக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்கள் அவர்களுக்கு அளிப்பவர்களாகவே இருப்பீர்களென்பதை இங்கு நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எனவே நல்லதொரு தீர்வை நீங்கள் முன்வைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, யாழ்ப்பாணம் இன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டாடப்பட்ட நிலையில் இருக்கின்றது. "யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்டோம்! யாழ்ப்பாணத்தை எங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறோம்!" என்று கூறிக்கொண்டிருக்-கிறீர்கள்! ஆனால், யாழ்ப்பாணம் இன்று ஏனைய பகுதிகளிலிருந்து துண்டாடப்பட்ட நிலையில் இருக்கின்றது. அங்கேயிருக்கின்ற மக்கள் போக்குவரத்தில்லாமல் மிகவும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். போக்குவரத்தை ஆரம்பிக்குமாறு கேட்டுத் திருகோணமலையிலே மக்கள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். எங்களுடைய மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தாத வரைக்கும் அவர்களுக்குப் போக்குவரத்தில் எந்தவொரு பிரச்சினையும் நேராதென்பதையும், அவர்கள் கேடயங்களாகப் பயன்படுத்தப்படுவார்களாயின் நிச்சயமாகப் போக்குவரத்தில் பாதிப்புக்கள் ஏற்படுமென்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தாத வரைக்கும் போக்குவரத்தில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாதென்பதை நான் திண்ணமாக நம்புகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே! முல்லைத்தீவை எடுத்துக் கொண்டால், அங்கு தொடர்ந்து உண்ணாவிரதங்களும் பட்டினிச் சாவுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் அது பற்றி ஒரு

துளிகூடச் சிந்தனையில்லாமல், தமிழ் மக்கள் தானே இறக்கிறார்கள்; இறந்து போகட்டும் என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. உலர் உணவு வழங்கல் தடை செய்யப்பட்டதால், எமது மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கிருக்கும் அரசாங்க அதிபர்கள், சொற்ப உணவுப் பண்டங்களை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட காலத்துக்கு அவற்றை வழங்கி அங்குள்ள மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்களை காப்பாற்றும்படி நாங்கள் எத்தனையோ முறை எடுத்துக்கூறியும், அரசாங்கம் அதுபற்றிச் சிந்திப்பதாக இல்லை; சண்டையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. சண்டை நடத்துவதற்கான வாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருக்கிறதே தவிர, ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கோ, அல்லது இந்த மக்களின் பட்டினிச் சாவை நிறுத்துவதற்கோ அரசாங்கம் இன்று வரையும் நினைக்கவில்லை; நினைக்கவும் மாட்டாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

மட்டக்களப்புப் பிரதேசம் மின்சாரம் இல்லாமல் இன்று இருளினால் சூழ்ந்திருப்பதன் காரணமாக, அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. மின்சாரத்தின் மூலம் செயற்படக்கூடிய அரிசி ஆலைகள், தொழிற்சாலைகள் போன்றவை மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அங்கிருக்கும் வைத்தியசாலைக்கு ஒரு 'ஜெனரேற்றர்' கூட இல்லாததால், அங்கு சிறுவர்கள் இறந்திருக்கிறார்கள். மென்மேலும் சிறுவர்கள் இறக்கும் சூழ்நிலை அங்கு நிலவி வருகிறது. அங்குள்ள வைத்தியசாலைக்கு 'ஜெனரேற்றர்' கூட வழங்காது, ஒரு மெத்தனப் போக்கை அரசு கையாள்வதால், அங்கிருக்கும் நோயாளிகள் இறப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மன்னாரில் உள்ள நானாட்டான் பகுதியை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே மண்ணெண்ணெய் மிகக் குறைவாகவே வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல, அரசாங்கக் கட்டிடங்கள் கட்டுவதற்குக்கூட சீமெந்துப் பைக்கற்றுகள் மிகக் குறைவாகவே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது.

அதாவது ஐந்து பைக்கற்றுகள், பத்துப் பைக்கற்றுகள் வரைதான் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, ஐம்பது இலட்சம் ரூபா திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அதாவது, நிறைவு பெறாத சூழ்நிலையில் அந்த ஐம்பது இலட்சம் ரூபா திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகள் "CLEAREDAREAS" என்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படியென்றால் ஏன், அங்கே சீமெந்தை அனுப்பத் தயங்குகின்றீர்கள்? அதனால், அங்கு பசளை வகைகளையும் மற்றும் நெல் போன்ற தானியங்களையும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக, கட்டத் தீர்மானிக்கப்பட்ட அந்த கட்டிடத்தைக் கட்ட முடியாமல் அதற்கான பணம் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றது.

மன்னார் கச்சேரியிலே வேலை செய்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள், தினமும் பாதுகாப்புப் படையினரிடம் தாம் சோதனையிடப்படுவதற்காகச் சென்று, சோதனையிடப்பட்ட பின்னரே ஒவ்வொரு முறையும் அவர்கள் கடமைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அவர்கள் தினமும் சென்று தங்களுடைய வெளிக்கள வேலைகளைச் செய்வதற்கேதுவாக, ஏன் அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நீங்கள் மறுக்க வேண்டுமென்று நான் கேட்கின்றேன். மன்னாரைப் பொறுத்தமட்டிலே அங்கு அரசாங்க வேலைத்திட்டங்கள் மிகவும் மந்த கதியில், ஆமை வேகத்தில்தான் செய்யப்படுகின்றன. அதற்குக் காரணம், தினமும் காலையில் இவ்வாறு அவர்களைப் பரிசோதனை செய்து அனுப்புவதாகும். ஒவ்வொரு முறையும் அவர்கள் வெளியிலே செல்லும்போது பரிசோதனையிடப்பட்டுத்தான் அனுப்பப்படுகின்றார்கள். ஆகவே, இந்த நடைமுறையை நீங்கள் மீள்பரிசீலனை செய்யவேண்டும். எங்களுடைய மக்களுக்குப் போர் என்ற ரீதியில் பல்வேறு துன்பங்களைக் கொடுக்கும் நீங்கள், ஏன் சாதாரண விடயங்களிலும் துன்பத்தைக் கொடுக்கின்றீர்களென்று இங்கு நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

எனவே, இந்தப் போரை நிறுத்துவதற்கு இங்குள்ள பிரதான கட்சிகளிரண்டும் முயற்சி செய்ய வேண்டும். இந்த விடயத்திலாவது ஒன்றிணைந்து ஒரு நியாயமான, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய

நீதியான தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். இரண்டு பகுதியினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனரே தவிர, எங்களுடைய மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைக்கவோ, அல்லது அந்தப் பிரச்சினைகளை நீதியான முறையில் தீர்த்து வைப்பது பற்றி நினைத்துப் பார்க்கவோ யாருமே முன்வருகிறார்களில்லை என்பதை இங்கு நான் கூறிக்கொள்ளுகின்றேன். எனவே, இனியாவது பகைமைகளை மறந்து, அவற்றை ஒரு பக்கம் ஒதுக்கி எங்களுடைய இனத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு பகுதியினரும் ஒன்றிணைந்து, எங்களுடைய மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான ஒரு தீர்வை முன் வைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**09.12.1998**

கௌரவ தவிசாளர் அவர்களே! பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான இந்தக் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக எழுந்து நிற்கும் இவ்வேளையில், வேதனை நிறைந்த உணர்வுகளே என் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இச்சபையில் சொல்ல விரும்புகின்றேன்.

இவ்வமைச்சைப் பாதுகாப்பு அமைச்சு என்று அழைப்பதை விட, யுத்தத்திற்கான அமைச்சு என்று கூறுவதே இன்றைய நிலையில் பொருத்தமானதாக இருக்கும். தொடரும் யுத்தத்துக்கான சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான அமைச்சு என்ற அடிப்படையில் இந்த அமைச்சு முழுக்க, முழுக்க யுத்தத்திற்குப் பொறுப்பான அமைச்சாகவே மாற்றமடைந்திருக்கின்றது. இந்த யதார்த்தத்தின் பின்னணியில் தொடரும் கொடிய யுத்தத்தின் காரணமாக எமது தமிழினம் அன்றாடம் அனுபவித்துக் கொண்டிருக்கும் அத்தனை துன்ப துயரங்களும், கஷ்ட நஷ்டங்களும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகளின் விளைவுகளே என்ற உண்மையை மறுக்க முடியாது; மறைக்கவும் முடியாது.

கௌரவ தவிசாளர் அவர்களே! எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினை காரணமாகத் தான், இந்த நாட்டில் தினமும் மனித உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கின்றன. இதேவேளையில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, அப்பாவித் தமிழ் பொதுமக்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுவதும் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும் தொடர்ந்து விளக்க மறியலில் தள்ளப்படுவதும் தினமும் தொடர்கின்றன. இந்த நிலைமை, போர் நிகழும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலும் தமிழர்கள் கணிசமாக வாழும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மாத்திரமன்றி, மலையகத்திலும் கூட அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் அதிகரித்துக்கொண்டிருக்கும் அசம்பாவிதச் சூழ்நிலையை நிரந்தரமாக்கியுள்ளது.

இதே வேளையில், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல நூறு தமிழ் இளைஞர்கள், அவர்களுக்கான புலன் விசாரணைகள் என்றோ முடிவடைந்தும் கூட இன்னமும் வழக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில், களுத்துறைச் சிறைச்சாலையிலும் கொழும்புச் சிறைச்சாலைகளிலும் தொடர்ந்து நடைப்பிணங்களாக நகரக வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். கண்டி, பதுளை போன்ற மலையக நகரங்களில் உள்ள சிறைகளிலும் இதே நிலைமையே நீடித்துக் கொண்டிருக்கின்றது. "புலி வேட்டை" என்ற பெயரில் கைதாகும் தமிழ் இளைஞர்கள் காட்டுமிராண்டித் தனமாக சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதன் காரணமாக, உயிரிழக்கும் நிலையும் மற்றும் படுகொலை செய்யப்படும் நிலையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

சமீபத்தில், கல்முனையிலுள்ள பாண்டிருப்பைச் சேர்ந்த சதாசிவம் சஞ்சீவன் என்ற 18 வயது மாணவன், அவரின் கிராமத்திலுள்ள சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டதையடுத்து, கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டார். பின்னர் கை விரல்கள் துண்டிக்கப்பட்டு, நாக்கு தங்கூசியால் தைக்கப்பட்ட நிலையில்

அவரின் பிரேதம் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் வைத்து அவரின் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதயத்தைப் பிழியும் இந்தக்கொடுமை, கல்முனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சில பொலிஸ்காரர்களால் செய்யப்பட்டது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. படுகொலை செய்யப்பட்ட சஞ்சீவனின் மரண விசாரணையின்போது, திடுக்கிடும் தகவல்கள் நீதிமன்றத்தில் வெளியாகியிருக்கின்றன. இந்த பாவ காரியத்தில் பயங்கரக் கொடுமையில் ஈடுபட்ட - காட்டுமிராண்டிகளை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கிடப் பாதுகாப்பு அமைச்சு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? என்ற கேள்வி, என்னுடையது மாத்திரமல்ல, முழுத் தமிழினத்தினதும் கேள்வியுமாகும்.

சமீப காலத்தில் இப்படி எத்தனையோ படுகொலைகள் கிழக்கில் நடந்தேறியுள்ளன. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் என்ற பட்டியலுக்கும் தள்ளப்பட்டார்கள் அல்லது மோதலில் கொல்லப்பட்டார்கள் என்றோ, குறுக்குத் துப்பாக்கிச் சூட்டுக்குள் மாட்டிக் கொண்டார்கள் என்றோ கூறப்பட்டு, உண்மை புதைக்கப்பட்டது. கைது செய்யப்படும் ஓர் இளைஞனோ, அல்லது யுவதியோ அவர்கள் புலியாக இருந்தாலும், சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்படுவதற்கு மனித உயிர்கள் ஒன்றும் மயிர் கொட்டிகள் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புலிகள் என்றால் கூட, சட்டத்தின் முன் நிறுத்தி, நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை நிருபித்து, தண்டனை பெற்றுக்கொடுப்பது தான் நாகரீக மனிதர்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறை என்பதை இச்சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே! இம்மாதம் 3 ஆம் திகதி மன்னாருக்கு அருகிலுள்ள 'தளவன் வாடி' என்ற கிராமத்தில் படையினரின் சுற்றி வளைப்பின் போது, ஓர் இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தக் கொடூரத்தைக் கண்ணால் கண்டவர்கள் மிரட்டப்பட்டிருக்கின்றார்கள். கொல்லப்பட்ட இளைஞன் புலிகள் கட்டுப்-பாட்டுப் பிரதேசத்தில் வசித்து வந்தவர் இராணுவக் கட்டுப்பாட்டுப்

பிரதேசத்துக்குள் வந்து, இரகசியமாகப் பொருள்களைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்குள் கடத்திச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது. இது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால், இந்தப் படுகொலையை எவராலும் நியாயப்படுத்த முடியாது. இத்தகைய சம்பவங்கள்தான், புலிகள் இயக்கத்தை நோக்கி தமிழ் இளைஞர்களைத் தள்ளுகின்றன என்பதை அரசாங்கம் இனியாவது உணர்ந்து கொள்வது நல்லது.

மன்னாரில் சமீப நாட்களாக, சுற்றி வளைத்துத்தேடுதல் நடவடிக்கையின் போதும் இரவுநேர ரோந்துகளின் போதும் இளைஞர்கள் தாக்கப்படுவதாகத் தொடர்ந்து தகவல்கள் கிடைக்கின்றன. சமீப நாட்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கண்மூடித்தனமான கைதுகள் அதிகரித்து வருகின்றன. அண்மையில் ஒட்டுசுட்டான் கைப்பற்றப்பட்டதை அடுத்து, சுமார் அறுநூற்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் காணவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கௌரவ தவிசாளர் அவர்களே! புலி என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் ஒரு சில மாதங்கள் கல்முனையில் உள்ள 'சர்வோதய' நிலையத்தில் பயிற்சி உத்தியோகத்தராக இருந்துவிட்டுப்போயுள்ளார் என்ற காரணத்துக்காக, கல்முனை மாவட்ட சர்வோதய இணைப்பாளர் கந்தையா கனகரத்தினம் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலின் பின் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். சர்வோதய இணைப்பாளர் கந்தையா கனகரத்தினம் கைது செய்யப்பட்ட அதே விவகாரத்தில், ஆலையடிவேம்பு பிரதேசச் சபைத் தலைவர் நடராசா அவர்களும் கைது செய்யப்பட்டு இப்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார். முதியவரான இவர் ஒரு நோயாளியும் கூட, அற்ப, சொற்ப காரணங்களுக்கு எப்படி எல்லாம் பயங்கரவாதச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள்.

கௌரவ தவிசாளர் அவர்களே! தொடரும் போரின் காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில், பொதுமக்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் பல உயிரிழப்புக்களையும் உடல் ஊனங்-

களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதேநேரத்தில் வன்னி மக்களுக்கு உலர் உணவும் இல்லை. அகதிகளாக, அத்தியாவசிய மருந்துகளும் இல்லாத சூழ்நிலையில் அங்கே அவர்கள் தொடர்ந்து நோயாளிகளாக இருக்கிறார்கள். இந்த நிலையில், தொடரும் போர் காரணமாக வன்னியில் சுமார் 112,000 மக்கள் கடந்த சில நாட்களில் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

கௌரவ தவிசாளர் அவர்களே! ஏற்கெனவே இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வவுனியா நகரிலுள்ள அகதிமுகாம்களில் நீண்டகாலமாக முடக்கப்பட்டுள்ளனர். உறவினர்களோடு சேர்ந்து வாழக்கூட அனுமதி வழங்காமல் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எமது மக்களின் வாழ்வு தினமும் துன்ப,துயரங்களினால் தள்ளாடும் போது, நாளை சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் ஆயத்தம் செய்து வருகிறது. நிரந்தரமாகிவிட்ட போர்ச் சூழ்நிலையில், எமது மக்களின் அடிப்படை மனித உரிமைகள் தினமும் மிதிக்கப்படுகையில், நசுக்கப்படுகையில், சர்வதேச மனித உரிமைகள் தினம் அரசினால் கொண்டாடப்படுவது அர்த்தமற்றதாகும். மனித உரிமைகள் மறுக்கப்படும் நிலையில், வேதனைகளோடு போராடும் எமது மக்களின் அவல வாழ்வை எடுத்துக்காட்ட, நாளைவரும் மனித உரிமைகள் தினத்தை, எமது மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுவதை எதிர்க்கும் நாளாக எமது 'ரொலோ' இயக்கம் அனுஷ்டிக்கத் தீர்மானித்திருக்கின்றதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும், திருகோணமலையில் இடம்பெறுகின்ற அத்துமீறிய குடியேற்றங்கள் அகற்றப்படவேண்டும். அங்கு லிங்கநகரிலுள்ள எமது மக்களின் குடிசைகள் பாதுகாப்புப் படையினரால் எரியூட்டப்படுகின்றன; அந்த மக்கள் துன்பப்படுத்தப்படுகின்றார்கள். பாதுகாப்புப் பிரதி அமைச்சரவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, திருகோணமலையிலுள்ள எமது மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, எமது மக்களின் நலனில் அக்கறைகொண்ட எவரும் பாதுகாப்பு அமைச்சுக்கான

இந்த நிதியொதுக்கீடுகளை ஆதரிக்க முடியாதென்பதைத் தெரிவித்து, எனது பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன். நன்றி. வணக்கம்.

**09.04.1999**

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான இந்த விவாதத்தில் உரையாற்ற எழுந்து நிற்கும் இந்த நேரத்தில், என் சிந்தனையை ஆக்கிரமித்து நிற்கும் ஒரு விடயத்தை நேரடியாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இன்னும் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து இந்தச் சபையில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் இந்த மாதாந்தச் சடங்கு பின்பற்றப்படப்போகின்றது? இன்னும் எத்தனை காலத்திற்கு இந்த அவசரகால நிலைமையை எமது நாடு எதிர்கொள்ளப்போகின்றது? அவசரகால நிலைமை என்ற அரசியல் அலங்கோலம் இன்னும் எத்தனை காலத்திற்கு எமது நாட்டை ஆட்டிப் படைக்கப் போகின்றது? இதற்கு முடிவே கிடையாதா? முற்றுப் புள்ளியிட முடியாதா? இந்தக் கேள்வியைத் தான் இச்சபையிலே நான் எழுப்ப வேண்டியவனாக இருக்கின்றேன் தவிர்க்க முடியாத ஒரு நெருக்கடிச் சூழ்நிலையில் ஆகக் குறைந்த குறுகிய காலத்திற்கு மாத்திரமே பிரகடனப்படுத்தப்பட வேண்டிய அவசரகால நிலைமை, முடிவற்ற தொடர் கதையாக நீடிப்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை இந்தச் சபையில் அங்கம் வகிக்கும் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! ஓர் உள்நாட்டு யுத்தத்தின் இரும்புப் பிடியில் இந்த இலங்கைத்தீவு சிக்கித் திணறிக் கொண்டிருக்கின்றது. அரசியல் சாசனத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் அடிப்படை மனித உரிமைகளில் அநேகமானவை, அவசரகாலச் சட்டத்தின் கீழ் அனுதினமும் அப்பட்டமாக மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுற்றி வளைப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள் என்பன வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சாதாரண நிகழ்வுகள் ஆகிவிட்டன. வெறும் சந்தேகத்தின் பேரில் கைதாகித் தடுப்புக் காவலிலும், தொடர்ந்து விளக்கமறியலிலும் வைக்கப்பட்டு, பல மாதங்களாகத் துன்பம் அனுபவித்த பின்னர்

"வழக்குத் தொடுப்பதற்கு ஆதாரமில்லை" என்று சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு எடுப்பதனால் விடுதலை பெறும் அப்பாவிகளின் மனித உரிமைகளுக்கு அர்த்தம் எதுவும் கிடையாது! புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. தமது குடும்பத்திலுள்ள ஆண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, பெண்கள் இராணுவத்தினருடன் இரவில் ஒத்துழைக்க வேண்டிய நிலைமை மட்டக்களப்பு மாவட்டத்தின் தொலை தூரக் கிராமங்களில் நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

மலையகத்திலும் கூட நியாயமற்ற கைதுகளும் தடுப்புக் காவல் நடவடிக்கைகளும் தொடர்ந்து பல இடங்களில் நிகழ்ந்திருக்கின்றன. கைதானோர் தொடர்ந்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிகழ்வுகள் எல்லாம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேலும் தொடரத்தான் போகின்றன. இந்த நிலைமை இப்படியே தொடர்ந்து, மேலும், மேலும் நீடிக்குமானால், இந்த நாடு ஓர் இருண்ட யுகத்திற்குள் நிரந்தரமாகத் தள்ளப்பட்டு விடும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்போதாவது - இனியாவது - மனச்சாட்சியின் அடிப்படையில் சிந்திக்கவும் செயற்படவும் அரசியல்வாதிகளாகிய நாம் அனைவரும் முன்வரவேண்டும். எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சனைக்கு ஒரு நீதியான அரசியல் தீர்வினைக் கண்டிட, அரசியல் வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் செயற்பட வேண்டும். தொடரும் போரின் மூலகாரணமான இனப்பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வினைக் காண்பதன் மூலமே, இந்த நாட்டை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்க முடியும் என்பதை அனைவரும் உணரவேண்டும். இதனை விடுத்து, சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு போரைத் தொடர்வதன் மூலம் எதனையும் ஆக்கபூர்வமாகச் சாதிக்க முடியாது என்பதை முதலில் அரசாங்கம் உணர வேண்டும். அதேநேரத்தில், குறுகிய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அரசுடன் இணைந்து இனப்பிரச்சினையை அணுகிடப் பிரதான எதிர்க்கட்சியும்

தயாராக வேண்டும். தேசியப் பிரச்சினையைத் தேசியக் கண்ணோட்டத்துடன் அணுகிட அரசும் எதிர்க்கட்சியும் தயாராக இல்லாத வரையில் போர் தொடர்வதைத் தவிர்க்க முடியாது என்பதை நான் கூறியாக வேண்டும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! இன்று மடுமாதா கோயில் சூழலில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இதனை இந்த நாட்டில் வாழுகின்ற கத்தோலிக்க மக்கள் தீவிரமாக எதிர்க்கின்றார்கள் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இன வேறுபாடுகளுக்கப்பால் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இந்த விடயத்தில் ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர். போரின் கொடுமை வடக்கு - கிழக்கையும் தாண்டி, தென்னிலங்கையில் வாழுகின்ற கத்தோலிக்க மக்களின் மன உணர்வுகளையும் மிதிக்க ஆரம்பித்து விட்டதென்பதை, கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவனென்ற முறையில் என்னால் நன்கு உணர முடிகின்றது. அது மட்டுமல்ல, இன்று மன்னார் ஆயர் உட்பட குருமார்கள் பலர் மடுத் திருப்பதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை அங்கிருந்து அகற்றக்கோரி உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். சிறுபான்மை இனத்தை, சிறுபான்மை மதத்தவர்களின் உணர்வுகளை மதிக்காதவரை தேசிய ஒற்றுமை என்பது தொடர்ந்து ஒரு வார்த்தை ஜாலமாகவே இருக்கப் போகின்றது!

இந்த இலங்கைத் தீவின் மக்கள் அனைவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆயினும் போர் தொடர்கின்றதென்றால் அதன் உண்மைக் காரணம், அரசியற் தலைமைகளின் நேர்மையீனமேயாகும். அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்காமல், அடுத்த தேர்தலைப் பற்றியே நம்மில் பலரும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். எமது பிள்ளைகளில் எவரும் இந்தப் போரில் பலியாக போவதில்லை. பலியாகிக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் - சிங்கள இளைஞர்களும் யுவதிகளுமே! கடந்த கால அரசியற் தலைமைகளின் தவறுகளை இப்போது முழுமையாக இலங்கைத்தீவு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இதேபோல, இன்றைய அரசியற்

தலைமைகளின் தவறுகள் நாளைய தலைமுறையை நாசமாக்கப் போகின்றன. போரை நிறுத்த, அரசியல் பேச்சுவார்த்தைகளின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இப்போதும் காலம் கடந்துவிடவில்லை! "மனம் உண்டானால் இடம் உண்டு" என்று தமிழ் மொழியில் ஒரு பழமொழி உள்ளது. பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் நிச்சயமாக தீர்க்க முடியும். பிரச்சினையைத் தீர்க்க அரசு விரும்புகின்றதா? பிரச்சினையைத் தீர்ப்பதில் தனது பங்களிப்பை வழங்கப் பிரதான எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றதா?

தமிழினம் சுதந்திர இலங்கையில் எத்தனையோ அரசாங்கங்களைச் சந்தித்துவிட்டது. அத்தனை அரசாங்கங்களும் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தவும் சிக்கலாக்கவுமே உதவியிருக்கின்றன. இதேபோலவே எதிர்க்கட்சிகளும் இந்த வரலாறு மாறாத வரை இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை என்பதைக் கூறிக் கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

## 06.05.1999

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, அவசர காலச் சட்ட நீடிப்பின் மீதான இந்த விவாதத்தில், நான் சார்ந்திருக்கும் 'ரெலோ' இயக்கத்தின் சார்பில், எமது திட்டவட்டமான நிலைப்பாட்டினை எனது பேச்சின் ஆரம்பத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, தொடரும் அவசரகால நிலைமையென்பது, நீண்டுகொண்டே செல்லும் யுத்தத்தின் கொடுமைகளுக்கும் கொடூரங்களுக்கும் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் சட்டரீதியான பாதுகாப்பினையும் நியாயப்படுத்தலையும் வழங்கிக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தின் நேரடி விளைவாக, எமது தமிழ் இனத்தின் மீது தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் அத்தனை அநியாயங்களும் அத்துமீறல்களும் அடக்குமுறைகளும் அக்கிரமங்களும் இந்த அவசரகால நிலைமை என்பது நீடிக்கப்படவில்லையென்றால் சட்ட ரீதியாக ஒரு வினாடி கூடத்தாக்குப் பிடிக்க முடியாது. இந்த

யுத்தத்தினை எதிர்க்கும் எந்தவொரு மனிதரும் இந்த அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவு வழங்க முடியாது.

தொடரும் யுத்தத்தினை சபித்துக்கொண்டிருக்கும் எமது தமிழ் இனத்தை, மாண்புமிக்க இந்தச் சபையில் பிரதிநிதித்துவப் படுத்துவதாக உரிமை கோரும் எவரும், இந்த அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதை எதிர்த்தே தீர வேண்டும். ஒருபுறம் யுத்தத்தினை எதிர்ப்பதாகப் பெரிதாகப் பேசிக்கொண்டு, மறுபுறத்தில் மாதாந்தம் அவசரகால நிலைமையை நீடிப்பதற்கு இந்தச் சபையில் ஆதரவளிப்பதென்பது, தமிழினத்தைச் சேர்ந்த எவரைப் பொறுத்தமட்டிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும். தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்பதில் மிகத்தெளிவாகவும் தீர்க்கமாகவும் உள்ள எமது 'ரெலோ' இயக்கம், இந்த அவசரகால நிலைமை நீடிப்பினை, தமிழினத்தைச் சேர்ந்த அனைவரும் எதிர்த்து நிற்க வேண்டும்; இந்தச் சபையிலே இதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்றே தொடர்ந்து அழைப்பு விடுத்து வந்திருக்கின்றது. " அவசரகால நிலைமை நீடிப்புக்கு எதிராக வாக்களிக்கப் போகின்றோம்" என்று தமிழினத்தினை இந்தச் சபையிலே பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவமிக்க எனது நண்பர்கள் அனைவரும் அறிவித்தாலே போதும். இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு விடும்!

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! தொடரும் யுத்தத்துக்கான சட்டரீதியான அடிப்படையையும் யுத்தத்தின் கொடூர விளைவுகளுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினையும் வழங்கி நிற்கும் அவசரகால நிலைமை தொடர்வதற்கு, கைகொடுத்து நிற்கும் தமிழர் அனைவரும் மன்னிக்க முடியாத வரலாற்றுத் துரோகத்தினை ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து இழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் கூறியேயாக வேண்டும். எம்மினத்தின் சார்பில் இந்தச் சபையில் அளிக்கப்பட்டு வரும் வாக்குகள் தாம் இந்த அவசரகால நிலைமைக்கு ஆயுள் நீடிப்பினைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன என்ற மிகக் கசப்பான உண்மையை, அடக்கியொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது இனம், மிக்க வேதனையுடன் தினமும் ஜீரணிக்க முயன்று கொண்டிருக்கின்றது.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! இந்த விடயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் விரிவாக நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அவசரகால நிலைமையின் கீழ் தொடரும் யுத்தத்தின் பின்னணியில், மனித மந்தைகளாகத் தினமும் மிதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு கஷ்ட, நஷ்டங்களுக்கு முடிவு கட்டுவதற்கும், கண்ணியத்தையும் கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்கும் ஏதுவான போதிய பாராளுமன்றப் பிரதிநிதித்துவப் பலத்தைக் கூட்டாகக் கொண்டிருக்கும் சகல தமிழ் கட்சிகளும் இப்போதாவது இனியாவது - இந்த அவசரகால நிலைமை நீடிப்பினை இந்தச் சபையில் எதிர்க்க முன்வந்தால், ஒரு புதிய சகாப்தத்தினை எமது இலங்கைத் தீவிலே உடனடியாக ஆரம்பித்து வைக்க முடியுமென்பதுதான். ஆனால், எமது மக்களின் இன்றைய அவல வாழ்வுக்கு அடிப்படைக் காரணமான யுத்தத்திற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பையும் நியாயத்தையும் வழங்கி, அவசரகாலச் சட்டத்தைப் பாதுகாத்து நிற்கும் கேடயங்களாக எமது இனத்தைச் சேர்ந்தவர்களே - எமது தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களே - இந்தச் சபையில் தொடர்ந்து பயன்பட்டு வருகின்றார்களென்பதனை நினைக்கும் போதும் உணரும்போதும் எம்மினத்தில் இன்றைய துன்ப, துயரங்களுக்காக வேறு எவரையும் நாம் குற்றம் கூற முடியாது. எனவேதான் மிகக் கசப்பானதோர் யுத்தத்தின் சோகத்தைச் சுமந்தபடி எமது மக்கள் தொடர்ந்து அனுபவிக்கும் வேதனைகளில் சிலவற்றையாவது இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட நான் விரும்புகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பகுதியிலும் காரைநகரிலும் தனியார் காணிகளைப் படை முகாம்களின் விஸ்தரிப்புக்காகச் சுவீகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் நாடறிந்தவை. " வலிகாமம் வடக்கில் காணி சுவீகரிப்பு இல்லை" யென மேன்மைதங்கிய ஜனாதிபதியின் சார்பில் இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் அரசாங்கத்தின் புதிய நிலைப்பாடென்றால், இந்தக் காணி சுவீகரிப்புத் தொடர்பான பழைய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை - 1987 ஆம் ஆண்டில் விடுக்கப்பட்ட அறிவித்தலை - அரசாங்கம் இரத்துச்

செய்ய வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படாத வரை, வலிகாமம் வடக்கில் காணி சுவீகரிப்பு இல்லை என்ற அரசாங்கத்தின் சமீபத்திய அறிவிப்பினை தீர்க்கமான ஒன்றாகக் கருத நான் தயாரில்லை.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, மற்றைய விடயம், காரைநகரில் சீநோர் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள தனியார் காணிகளைக் காரைநகர் கடற்படைத்தளம் விஸ்தரிக்க என்ற பெயரிலே சுவீகரிப்பு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும். இந்த விடயத்திலும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டினை மாற்றியாக வேண்டும். வலிகாமம் வடக்கிலும் சரி, காரைநகரிலும் சரி, வடக்கு - கிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தப் பகுதியிலும் சரி, தமது சொந்தக் காணிகளில் மீண்டும் குடியேற அவற்றின் உரிமையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது அநீதியானது. வருடக்கணக்காக யுத்தத்தை நடாத்திக் கொண்டு, இந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த காணிகளில் குடியேற முனைவதை தடுப்பது எந்த வகையில் நீதியானது? இந்த விடயத்தில் மனிதாபிமான ரீதியில் செயற்பட அரசாங்கம் முன்வர வேண்டும்.

வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நிலவிக் கொண்டிருக்கும் மருந்துத் தட்டுப்பாடு நீக்கப்படவேண்டும். புலிகளுக்கும் மருந்துகள் போய்ச் சேருகின்றன என்ற காரணத்தைக் காட்டி, மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகளை மறுப்பது நியாயமானதும் அல்ல. நாகரிகமானதும் அல்ல. வன்னியில் சமீபத்தில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய வைத்திய வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் நான் கோருகின்றேன். வெளிநாட் டிலிருந்து மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் அம்புலன்ஸ் வண்டி, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் அமைந்திருக்கும் விடத்தல் தீவு வைத்தியசாலையிலிருந்து நோயாளிகளை மடுவுக்கும் வவுனியாவுக்கும் கொண்டு வருவதற்காகவே வழங்கப்பட்டது. எனவேதான் அந்த அம்புலன்ஸ் வண்டியை விடத்தல் தீவு வைத்தியசாலைக்கு

அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! வன்னிப்பிரதேசத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கும் விடயங்களில் ஒன்று, 'பாஸ்' எனப்படும் வதிவிட அனுமதிப் பத்திரம் என்ற விடயமாகும். வெண்கலச் செட்டிகுளம் பகுதியில் எவருக்கும் நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். நிரந்தர பாஸ் வழங்குவதற்கு இவர்களிடமிருந்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம், கிராம சேவகரின் சான்றிதழ், அடையாள அட்டை உட்பட 12 பத்திரங்கள் கோரப்படுகின்றன. பலரிடம் திருமண அத்தாட்சிப் பத்திரம் கிடையாது. ஏனெனில், அவர்களில் திருமணங்கள் சமய ரீதியாக ஆலயங்களில் நிகழ்ந்தவையும் பதிவு செய்யப்படாதவையு-மென்பதேயாகும். யுத்தம் காரணமாக அங்குமிங்கும் ஓடிய மக்களில் பலரிடம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கிடையாது. அவர்களின் ஆவணங்கள் எல்லாமே தொலைந்து போயுள்ளன. எனவே, நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையுடன், கிராமசேவகரின் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை என்பன சமர்ப்பிக்கப்படுமிடத்து, நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு அரசாங்கம் உத்தரவிடவேண்டும். வவுனியாவிலிருந்து கொழும்புக்கோ அல்லது வேறு இடத்திற்கோ ஒருவர் சென்று வர வேண்டுமானால், பிணைகாரரைக் கொடுத்தால்தான் அவர் வெளியேற அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணக்குடாநாடு புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பொழுது, இதே நடைமுறையைத்தான் அவர்கள் கையாண்டார்கள். புலிகளைப் பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கும் அரசாங்கம், அவர்களின் நடைமுறைகளைப் பின்பற்றுவது வேடிக்கையானது, இனியாவது பிணைகாரர் வேண்டுமென்ற விதிமுறையை ரத்துச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வலியுறுத்து-கின்றேன்.

கௌரவ குழுக்களின் தவிசாளர் அவர்களே! களுத்துறைச் சிறைச்சாலை உட்பட பல்வேறு சிறைச்சாலைகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் பரிதாப நிலைமையை மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவர்களில் சிலர் சமீப காலங்களில் "விசாரணை செய்; அல்லது விடுதலை செய்" என்ற கோரிக்கையை முன்வைத்து பல தடவைகள் உண்ணாவிரதமிருந்த போது, சிலர் அங்கே ஓடிப்போனார்கள்; வாக்குறுதிகளை வழங்கினார்கள். ஆனால், கைதிகளின் நிலைமையில் எந்தவித மாற்றமும் இல்லை. இவர்களில் பலர் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றார்கள். சிலர் மூன்றாண்டுகளுக்கு மேலாகவும் சிறைகளில் இருக்கிறார்கள். இனியாவது சட்டமா அதிபர் திணைக்களம், சில அரச சட்டத்தரணிகளை விசேடமாக நியமித்து, இந்தக் கைதிகள் மீது விரைவாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கோருகின்றேன். இந்த அரசியல் கைதிகளில் பெரும்பாலோர் அப்பாவிகள் என்பதையும் நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

சர்வதேச மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் மனித உரிமைகளைப் பற்றிப் பெரிதாகப்பேசுவதில் அர்த்தமில்லை. உள்நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலில் தள்ளப்பட்டு, பின்னர் விளக்க மறியலில் வைக்கப்படுபவர்களின் விவகாரத்தில் மனிதாபிமானக் கண்ணோட்டம் வேண்டும். இச்சட்டங்களின் கீழ் கண்மூடித்தனமாகப் பிணை மறுக்காமல், யதார்த்த ரீதியாகச் செயற்படச் சட்டமா அதிபர் திணைக்களம் முன்வர வேண்டும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, இறுதியாக எமது 'ரெலோ' இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரொருவரின் கைதும் தடுப்புக் காவலும் பற்றிய ஒரு விவகாரத்தை எடுத்துக்கூற விரும்புகின்றேன். கடந்த பதினைந்து வருடங்களாக எமது இயக்கத்தில் உறுப்பினராக இருந்து வரும் தம்பியப்பா லோகநாதன் கடந்த மாதம் 23ஆம் திகதி காரை தீவிலுள்ள அவரது வீட்டில் வைத்து மருதானைப்

பொலிஸ் நிலையத்தின் விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ரஞ்சித் வனராஜா என்பவரால் கைது செய்யப்பட்டு, மருதானைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்திய அமைதிப் படை காலத்து ஆயுதங்கள் சில புதைத்து வைக்கப்பட்டிருப்பது பற்றித் திரு.லோகநாதனுக்குத் தெரியுமென்று மட்டக்களப்பிலிருந்து ஒரு சில துரோகிகள் கொடுத்த பொய்யான தகவலின் விளைவாக இவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது. இவர் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டுவரப்படும் வழியிலும், பின்னர் மருதானைப் பொலிஸ் நிலையத்திலும் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார். இவர் மீது பலாத்காரம் பிரயோகிக்க வேண்டாமென எமது இயக்கத்தின் சார்பில் சட்டத்தரணிகளூடாகவும், இன்ஸ்பெக்டர் வனராஜாவிடம் நேரடியாகவும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட பின்னரும் லோகநாதன் தாக்கப்பட்டுள்ளதுடன், சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார். இந்த விடயத்தினை இன்று நான் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன்.

கௌரவ பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அவர்கள் திரு.லோகநாதனின் விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, அவர்மீது நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் சித்திரைவதைக்கு முடிவுகட்ட வேண்டுமென்று நான் கோருகின்றேன். லோகநாதனை உடனடியாக விடுதலை செய்வதுடன், அவர் மீதான தாக்குதலுக்கும் சித்திரவதைக்கும் பொறுப்பேற்க வேண்டிய இன்ஸ்பெக்டர் வனராஜா மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும், திரு.லோகநாதனின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பது பற்றி விசாரணை நடாத்தப்பட-வேண்டுமென்றும் நான் கோருகின்றேன். பத்து வருடங்களுக்கு முன்னர் ஜனநாயக அரசியலுக்கு வந்த எமது இயக்கத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினரின் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் அடாவடித்தனமான நடவடிக்கை தொடர்பாகக் கௌரவ அமைச்சரிடமிருந்து நீதியான பதிலை நான் எதிர்பார்க்கின்றேன்.

**08.07.1999**

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! நன்றி, வழக்கம் போல இம்மாதமும் அவசரகால நிலை நீடிப்புப் பிரேரணை இச்சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. வழமை போல் இம்முறையும் நான் இந்தப் பிரேரணையை எதிர்த்து நிற்கின்றேன் என்பதை என் பேச்சின் ஆரம்பத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

புலன் விசாரணை என்ற பெயரில், சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வேண்டுமென்றே இவ்விதம் துஷ்பிரயோகம் செய்யும் எவரும், எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு மேலும் எண்ணெய் ஊற்றுகிறார்கள் என்பதையும், ஜனநாயக அரசியலில் நம்பிக்கை கொண்டிருக்கும் எமது சிந்தனையைத் தயவுசெய்து குழப்புவதற்கு முயற்சிக்க வேண்டாமென்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, திரு. லோகநாதனின் விவகாரத்தில் நாம் உடனடியாக நீதியைக் கோருவதுடன், இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கெல்லாம் கவசம்போல் செயற்படும் அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதை நாம் தொடர்ந்தும் எதிர்க்கின்றோமென்று தெரிவித்து, எனது பேச்சினை முடித்துக் கொள்ளுகின்றேன். நன்றி; வணக்கம்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! போரைத் தொடர்ந்து நடாத்துவதிலேயே அரசாங்கம் தீவிரமாக இருக்கின்றது என்பது அனைவரும் அறிந்ததே. அரசாங்கத்தைப் போலவே புலிகள் இயக்கமும் போரை எதிர்கொள்வதில் முனைப்பாக இருக்கின்றது என்பதும் தெரிந்த விடயமே. ஆனால், இந்த இலங்கைத் தீவில் வாழும் பொது மக்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்தப் போரினை விரும்பவில்லை. இந்தப் பொதுமக்கள் தாம், இன்னும் ஓராண்டு காலத்திற்குள் மீண்டும் ஒரு பாராளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் வாக்களிக்கப் போகின்றவர்கள். இருந்த போதும், இந்த நாட்டின் பொது மக்களின் அபிப்பிராயத்துக்கு மாறாக போர் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்றால், இந்த அபிப்பிராயம் - இந்தக் கருத்து - பரவலான ஒன்றாக - பரந்து விரிந்த ஒன்றாக - இருந்து கொண்டிருக்-

கின்றதேயொழிய பலமானதொரு சக்தியாக இன்னமும் மாறவில்லை என்பதே அதற்கான காரணமாகும். நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள இளைஞர்கள் தினமும் போரிலே மடிந்து கொண்டிருக்கையில், இந்தப் பாரதூரமான நிலைமையைவிட்டு உண்மையான கவலையையும் நேர்மையான அக்கறையையும் இந்த நாட்டின் அரசியல் வட்டாரங்களில் மிக அபூர்வமாகவே காண முடிகின்றது. இது வேதனைக்கும் வியப்புக்கும் உரிய விடயம் என்பதைத் தெரிவித்தேயாக வேண்டும்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! தொடரும் போருக்கான அடிப்படைக் காரணம், இந்த நாட்டின் இனப்பிரச்சினைதான் என்பதில் இந்தச் சபையில் உள்ளவர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை என்றே நான் நம்புகின்றேன். இந்த இனப்பிரச்சினை என்பது இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான உயிர்களை இது பலி கொண்டிருக்கின்றது; இந்த நாட்டின் அரசியல்வாதிகள் பலரின் வாழ்வுக்கு முடிவு கட்டியிருக்கின்றது. இந்தச் சபையின் உறுப்பினர்களாக இருந்த பலர் எரிந்து கொண்டிருக்கும் இந்த இனப்பிரச்சினையின் தீச்சுவாலைகளில் பொசுங்கிப் போயிருக்கின்றனர். இந்தச் சபையில் சம காலத்திலும் வெவ்வேறு கால கட்டங்களிலும் அங்கம் வகித்த பத்துத் தமிழ் அரசியல் வாதிகளின் படுகொலைகளுக்குக் காரணமும் இந்த இனப்பிரச்சினையின் கொடூரமே!

1975 இல் அல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்பட்ட தினத்திலிருந்து எனது மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய திரு சண்முகநாதன் கடந்த படுகொலை செய்யப்பட்டது வரை, திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், தர்மலிங்கம், ஆலாலசுந்தம் மற்றும் திருவாளர்கள் தியாகராஜன், சாம்தம்பி, முத்து, யோகசங்கரி, தங்கத்துரை உட்பட மொத்தமாக இச்சபையின் உறுப்பினர்களாக இருந்த பத்து தமிழ் அரசியல் வாதிகளின் அகால மரணங்களுக்கு அடிப்படைக் காரணம் இந்த இனப்பிரச்சினைதான். ஜனாதிபதி மேதகு பிரேமதாச, எதிர்க்கட்சித் தலைவர் திரு காமினி திசாநாயக்க ஆகியோர் படுகொலைகளும் இனப்பிரச்சினையின் விளைவுகளே.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! இந்த நாட்டின் சமீப கால வரலாற்றிலே இடம்பிடித்துக் கொண்ட தலைவர்கள் பலரை மட்டுமன்றி, இந்த இனப் பிரச்சினையின் விளைவாக எழுச்சி பெற்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றிலே மறுக்கப்பட முடியாமல் இடம்பெற்றிருக்கும் தீவிரவாதத் தலைவர்கள் பலரையும் இனப்பிரச்சினை பலி கொண்டிருக்கின்றது என்பதையும் எவரும் மறுக்க முடியாது. பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் 1983 ஜூலையில் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனப் படுகொலையின் உச்சத்தின் போது, வெலிக்கடைச் சிறையிலே கோரமாகக் கொலை செய்யப்பட்ட எமது இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களான திருவாளர்கள் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் முதல், தொடர்ந்து எமது இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய திரு.சிறிசபாரெத்தினம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் திரு.பத்மநாபா வரையிலான ஒரு தலைமைத்துவத் தலைமுறையே அழித்தொழிக்கப்பட்டதும் இனப்பிரச்சினையின் கோர விளைவுகளால் தாம்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! வெகு சமீப காலத்தில் - கடந்த வருடத்தில் யாழ்ப்பாணம் அடுத்தடுத்து இரண்டு மாநகர முதல்வர்களை இழந்ததையும் நான் குறிப்பிட்டேயாக வேண்டும். இத்தனைக்குப் பிறகும் இந்த நாட்டின் அரசியல் அரங்கிலே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக விசுவாசமானதும் விவேகமானதுமான ஓர் அணுகுமுறை கையாளப்படவில்லை என்பதை வேதனையோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்களால் விரும்பப்படாத போர் இன்னமும் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருப்பது ஏன்? எதனால்? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது இலகுவானது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நேர்மையான, நிதானமான தூய்மையான, துணிச்சலான ஓர் அணுகுமுறையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இந்த அணுகுமுறை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் தான் போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசியல் அதிகாரப் போட்டியில் ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் மும்முரமாக இருக்கையில், தமிழ் இனத்தின் பிரதிநிதிகளாக இச்சபையிலே வீற்றிருக்கும் கௌரவ சக உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் போரினைப் போஷித்துக் கொண்டிருக்கும் அவசரகால நிலைமை நீடிப்பினை எதிர்க்க இயலாமல் இருக்கையில் - இந்தப் போர் தொடர்ந்து கொண்டிருப்பதில் என்னதான் ஆச்சரியம் இருக்க முடியும்?

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! ஒரு விடயத்தை ஒரேயொரு விடயத்தை இச்சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திக் கூற வேண்டும். அதாவது, இந்த நாட்டின் அரசியல்வாதிகளாகிய நாம் அனைவரும் நெருப்போடு விளையாடிக் கொண்டிருக்கின்றோம். 'இனப்பிரச்சினை' என்னும் பெரும் நெருப்போடு நாம் அனைவரும் விளையாடிக் கொண்டிருக்கின்றோம். இது ஓர் விபரீத விளையாட்டு. கடந்த கால நிகழ்வுகளிலிருந்து ஏன் சமீபகால நிகழ்வுகளிலிருந்தும் கூட, நாம் உண்மையை உணரத் தவறினால் இந்த இலங்கைத் தீவு, எதிர்காலத்தில் இரண்டு துண்டுகளாக அல்ல. பல துண்டுகளால் சிதறிப் போவதற்கு நாங்கள் அனைவரும் வழி கோலினோம் என்பதுதான் வரலாறாக இருக்கும். சிதறுவது இந்த நாடு மாத்திரமல்ல, நாங்களும் கூடத்தான் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! இச்சந்தர்ப்பத்திலே, தொடரும் போரின் விளைவாக சமீப நாட்களில் நிகழ்ந்த சில துயரச் சம்பவங்களை நான் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சமீப நாட்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்திய சம்பவங்கள் இரண்டு நிகழ்ந்துள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் தாவடியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டியொன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர். எரிந்த நிலையில், நெருப்பின் தகிப்புடன் இருந்து கொண்டிருந்த பஸ் வண்டிக்கூடாக நடந்து செல்லுமாறு பொது மக்கள்

நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்குச் சில நாட்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் சிலர் கொல்லப்பட்டும் பலர் படுகாயப்பட்டுமிருந்தனர். அச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனால் பலர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அங்கிருந்த இராணுவத் தலைமை பின்னர் நடவடிக்கை எடுத்தது என்பதையும், இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆனால், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டி எரிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக, அப்பகுதி இராணுவத் தலைமையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதைப்போலவே மன்னாரில் இரண்டு இராணுவ வீரர்கள், புலிகள் இயக்கத்தினால் சுடப்பட்டு படுகாயமடைந்ததைத் தொடர்ந்து பொது மக்கள் மீது கண் மூடித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது. பொது மக்கள் பயணம் செய்யும் வாகனங்கள் மறிக்கப்பட்டு, பிரயாணிகள் பொல்லுகளாலும் கை, கால்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதனால் பலருக்குக் காயங்கள் ஏற்பட்டன. அரசாங்க ஊழியர்களும் காயமடைந்தோரில் அடங்கியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இச்சம்பவங்கள் மூலம் ஓர் உண்மை அப்பட்டமாகத் தெரிகின்றது. அதாவது, 1983 - 1984 கால கட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் நடந்து கொண்ட அதே விதத்தில் இப்போது மீண்டும் நடந்து கொள்ளும் நிகழ்வுகள் நிகழ ஆரம்பமாகியுள்ளன. "இராணுவத்தினர் தாக்கப்பட்டால் பொதுமக்கள் மீது பதில் தாக்குதல்" என்னும் அணுகுமுறை மீண்டும் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இதன் மூலம், புலிகள் இயக்கத்திற்கு ஆள் திரட்டிக் கொடுப்பதற்கு இராணுவம் முனைப்புடன் செயற்படுவதாகவே நான் கருதுகின்றேன். சில நாட்களுக்கு முன்னர் மன்னாரில் பொதுமக்கள் மீது கைவரிசை காட்டிய இராணுவத்தினர் மீது ஏன், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே! சமீபத்தில் மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாகச் சுமார் இருபத்தையாயிரம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களில் சுமார் பதினையாயிரம் பேர் வரையில் மன்னார் நகருக்குள் வந்துள்ளனர். ஏனையோர் மூன்றாம் பிட்டி, இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்களில் அகதிகளாகத் தங்கியுள்ளனர். மன்னாருக்கு வந்துள்ளவர்களைத் தவிர ஏனைய அகதிகளுக்கு இதுவரையும் அரசாங்க உதவி எதுவும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு உணவில்லை; குடிநீர் இல்லை. இது மனிதாபிமானப் பிரச்சினை. எனவே உடனடியாக உணவு, குடிநீர், அத்தியாவசிய மருந்துகள் என்பவற்றை இந்த அகதிகளுக்கு அனுப்பிவைக்குமாறு அரசாங்கத்தையும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மன்னார்ப் பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டவர்களில் 37 பேரின் சடலங்கள் மன்னாருக்கு கொண்டு வரப்பட்டு, மன்னார் நீதவானின் உத்தரவின் பேரில் புதைக்கப்பட்டுள்ளன. இச்சடலங்கள் அனைத்தும் புலிகள் இயக்கத்தினருடையவை என்று அரசாங்கம் கூறியுள்ளது. புலிகள் இயக்கத்தினர், "இச்சடலங்கள் தங்கள் உறுப்பினர்களுடையவையல்ல" என்று தெரிவித்து அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர். இந்த 37 சடலங்களில் பெரும்பாலானவை பொதுமக்களுடையவை என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது. அவை சம்பந்தமான தகவல்களும் எம்மிடமுள்ளன. எனவே, இது தொடர்பாக ஒரு விசாரணையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இந்த 37 சடலங்களில் 28 சடலங்கள் பெண்களுடைய சடலங்களாக உள்ளன. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் ஒரு விசாரணையை மேற்கொண்டு, ஒரு தீர்வை முன் வைக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு உங்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகின்றேன். நன்றி; வணக்கம்.

**05.08.1999**

கௌரவ தலைவர் அவர்களே! அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வரையில், இந்த நீடிப்புக்கு எதிரான எமது நிலைப்பாடும் நீடிக்கும் என்பதை நான் சார்ந்திருக்கும் ரெலோ இயக்கத்தின் சார்பில் எனது பேச்சின் ஆரம்பத்திலேயே தெரிவித்துக்-கொள்ள விரும்புகிறேன்.

கௌரவ அவைத் தலைவர் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னி தேர்தல் மாவட்டத்தின் மன்னார் பிரதேசத்தில் அமைந்துள்ள தலைமன்னாரில் உள்ள கடற்படைத் தளத்தினை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தலைமன்னார் மேற்கு கிராமத்தில் கடற்படைத் தளத்தினைச் சூழவுள்ள 50 ஏக்கர் வரையிலான நிலத்தினைச் சுவீகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் காரணமாக அங்கு குடியிருந்த பல குடும்பங்கள் இடம்பெயர்ந்திருக்கின்றன. இதேபோல யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் கடற்படைத் தளத்தின் அருகிலுள்ள காணிகளைச் சுவீகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகள் எல்லாம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக, அரசாங்கம் ஓர் இராணுவ அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

தலைமன்னார் மற்றும் காரைநகர் கடற்படைத் தளங்கள் தொடர்பாக இத்தனை காலமும் இல்லாத விஸ்தரிப்பு நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருவது, ஒரேயொரு முடிவுக்கே எம்மைக் கொண்டு செல்கின்றது. அதாவது, ஒரு நீண்டகால யுத்தத் திட்டமொன்றின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. அரசாங்கம் தொடர்ந்து போரிடவே திட்டமிடுகின்றது. எனவே, இராணுவத் தீர்விலேயே அரசாங்கம் முனைந்து நிற்கின்றது என்கின்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியுள்ளது.

கௌரவ தலைவர் அவர்களே! இதுதான் நிலைமை என்றால் அரசாங்கம் இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளது என்பதை வெளிப்படையாகப் - பகிரங்கமாக - அறிவிக்க வேண்டுமென்று நான்

கோருகின்றேன். இவ்விதம் நேர்மையாக அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று நான் கோருவதற்கு என்ன காரணம் என்பதையும் நான் தெரிவித்தாக வேண்டும். அதாவது தொடரும் போரினைச் சட்ட ரீதியாக அரசியல் சாசன ரீதியாகப் பாதுகாத்து நிற்கும் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை எதிர்க்க முடியாமல் - எதிர்க்க விரும்பாமல் - கௌரவமான இந்தச் சபையிலே இருக்கின்ற எனது இனத்தைச் சேர்ந்த - கௌரவம் மிக்க எனது நண்பர்கள் பலரின் கண்கள் திறப்பதை, மனச்சாட்சி உறுதிப்படுவதை அரசாங்கத்தின் இத்தகைய அறிவிப்பு ஒருவேளை சாத்தியமாகக்கூடும் என்ற அற்ப, சொற்ப நம்பிக்கையின் அடிப்படையில் தான் நான் இவ்விதம் கோருகின்றேன்.

தொடரும் போரின் காரணமாக எமது மக்கள் தொடர்ந்து அனுபவித்து வரும் துன்ப, துயரங்களை இந்தச் சபையிலே மீண்டும் மீண்டும் தெரிவித்தும் கூட, எமது மக்களின் நிலைமையில் சிறிதளவு மாற்றத்தைக்கூட எம்மால் காண முடியவில்லை. தொடர்ந்து படுகொலைகளும் கற்பழிப்புக்களும் பாலியல் வன்முறைகளோடு இணைந்த படுகொலைகளும் நிகழ்ந்து வருகின்றன. கடந்த மாதம் மன்னார் பிரதேசத்தில் உள்ள பள்ளிமுனைக் கிராமத்தில் முகமூடியணிந்த இராணுவத்தினர் சிலரால் கற்பழிக்கப்பட்டு, கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட ஜூடா தமலிற்றா என்ற 21 வயது யுவதியின் பேரால் இந்தச் சபையில் நான் குரல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்த யுவதி, புலிகள் இயக்கத்தில் சிறிது காலம் இணைந்திருந்த பின் அதிலிருந்து வெளியேறி சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியிருந்தார். இவரின் மூத்த சகோதரரான 'நெப்போலியன்' என்பவர், புலிகள் இயக்கத்தில் ஒரு முன்னணி உறுப்பினராக இருந்து, பின்னர் அதிலிருந்து வெளியேறி மன்னாரில் இராணுவத்தினருக்கு ஆதரவாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தவர். இந்தப்படுகொலை முழுமுழுக்க தசைவெறி காரணமாக இராணுவத்தினர் சிலரால் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்த படுகொலைக்குச் சில நாட்களுக்கு முன்னர் கர்ப்பிணியான ஒரு யுவதியும் அவரின் மூத்த சகோதரரான ஓர் இளைஞரும் காணாமல் போயிருந்தார்கள். இவ்விருவரும் கடத்தப்பட்டபின் அந்த இளம்பெண் - கர்ப்பிணிப் பெண் - கற்பழிக்கப்பட்டார் என்றும் பின்னர் இருவரும் கொலை செய்யப்பட்டார்கள் என்று பரவலாக நம்பப்படுகிறது. இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் வேறு யாருமல்ல. ஜூடான

கமலிற்றாவின் படுகொலையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அனுராதபுரத்தில் இராணுவப் பொலிசாரின் பாதுகாவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கனிஷ்ட இராணுவ அதிகாரியும் அவரின் கீழ் செயற்பட்ட சில இராணுவச் சிப்பாய்களுமேயாவார்.

இதைவிட, சில வாரங்களுக்கு முன்னர் மன்னார்ப் பகுதியில் காணாமல் போன ஆறு பொதுமக்களைக் கடத்திக் கொலை செய்தவர்களும் இவர்களே என்றும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக நான் அறிகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூரில் ஒரு முஸ்லிம் பெண்மணி, நள்ளிரவில் வீட்டுக்குள் நுழைந்த இராணுவச் சிப்பாய்கள் சிலரால் கற்பழிக்கப்பட்டுள்ளார். இந்த இலங்கைத் தீவின் ஜனாதிபதி ஒரு பெண்மணி; பிரதமரும் ஒரு பெண்மணி உலக சாதனையாக இது கருதப்படுகிறது. ஆனால், அதேநேரத்தில் யுத்தம் நிகழும் வடக்கு கிழக்கில் அப்பாவிப் பெண்களுக்கு - அபலைப் பெண்களுக்கு என்ன நடக்கின்றது?

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! இந்த யுத்தம் தொடரும் வரையில் இதே நிலைமைதான் நீடிக்கப்போகின்றது; நீடிக்கும்; நீடித்தே தீரும். எத்தனை ஆயிரம் பெண்கள் எமது பிரதேசத்திலே வடக்கு - கிழக்கு மாகாணத்திலே விதவைகளாகியுள்ளனர் என்பதை நாம் சிந்திக்கின்றோமே? இவர்கள் எல்லோரும் பொதுமக்கள்! போரிலே கலந்து கொள்ளாத பொதுமக்கள்! அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் வடக்கு - கிழக்கிலே யுத்தத்தின் மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலைமையில் - கற்பழிப்புக்களும் படுகொலைகளும் காரணமற்ற கைதுகளும் காவற்கூட மரணங்களும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலைமையில், அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் வடக்கு - கிழக்கிலே யுத்தத்தின் மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலைமையில் கற்பழிப்புக்களும், படுகொலைகளும் காரணமற்ற கைதுகளும் காவற்பட மரணங்களும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலைமையில், வன்னிக்கான பாதையைத் திறப்பதில்

இந்த அரசாங்கம் காட்டிய அர்த்தமற்ற பிடிவாதத்தினால், வன்னி மக்கள் - புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 3½ இலட்சம் மக்கள் கடந்த பல வாரங்களாகச் சந்தித்த கஷ்ட நஷ்டங்களின் பின்னணியில் இந்த யுத்தத்தை நிறுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்; புலிகள் இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஒன்றுக்கு முன்வர வேண்டும்; மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் கூடிய ஓர் அரசியல் தீர்வு முயற்சிக்கு முன்வர வேண்டும் என்று நான் இச்சபையிலே கோரி நிற்கின்றேன்.

சமாதான கோஷத்துடன் பதவிக்கு வந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் பதவிக்கால முடிவு நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலாவது, யதார்த்த பூர்வமாகச் செயற்பட முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளுடன் எனது பேச்சினை முடித்துக் கொள்கின்றேன். நன்றி.

**07.10.1999**

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! வழக்கம்போல அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதை எனது கட்சி எதிர்க்கின்றது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொடர்ந்து யுத்தத்தை நடாத்துவதிலேயே அரசு தீவிரமாக இருக்கின்றது. அதனால் தினமும் விலைமதிப்பற்ற உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. சமாதானத்திற்கான எந்த அறிகுறியையும் காணமுடியவில்லை. இந்த நிலைமையில்தான், தொடரும் இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் இதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு கௌரவ வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். இலங்கையில் இனப்பிரச்சினையை இன்னமும் ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்று வெறுமனே பிரகடனப்படுத்துவதால் எந்தப் பலனும் கிட்டப்போவதில்லை. வெறும் வாய்ச் சவால்களை விட்டுவிட்டு, இதனை இனியாவது தீர்த்து வைப்பதற்கு அரசு உடனடியாக முன்வர வேண்டும், தமிழ் தேசிய இனம் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான நீதியான தீர்வு ஒன்றைக் கொண்டு வர அரசு தயாராக வேண்டும், முன்வர வேண்டும். தீர்வில்லாமல் இந்தப் பிரச்சினை மேலும் நீடிக்குமானால், விரைவிலே இப்பிரச்சினையில்

ஐக்கிய நாடுகள் சபை நேரடியாகத் தலையிட வேண்டிய நிலை உருவாகும் என்பதை நான் இச்சபையிலே கூறி வைக்க விரும்புகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! தொடரும் யுத்தத்தின் விளைவாக, எமது மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை மீண்டும் மீண்டும் இச்சபையிலே பல தடவைகள் எடுத்துக் கூறிவிட்டோம். இருந்தும், நிலைமை மேலும் மோசமடைந்து கொண்டிருக்கின்றது. கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புக் கிராமத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுத் தாக்குதல், எம்மால் என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும். இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 22 அப்பாவிப் பொதுமக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு இன்னமும் அரசு முன்வரவில்லை. கோணகல கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிச் சிங்களப் பொதுமக்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கியமை நியாயமானது. இதேபோல, புதுக்குடியிருப்பு விடயத்திலும் அரசு நடந்து கொண்டிருக்க வேண்டும். அரசு காட்டியிருக்கும் அப்பட்டமான பாரபட்சம் அதன் உண்மையான சுயரூபத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், இன்றைய ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்த தமிழ் மக்களுக்கு, அரசு காட்டியிருக்கும் பிரதி உபகாரம் இது தானா? என்று நான் கேட்க விரும்புகின்றேன். புதுக்குடியிருப்புச் சம்பவத்துக்கு அரசே பொறுப்பெடுக்க வேண்டும். இந்தக் கண்மூடித்தனமான - காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் கொல்லப்பட்டோர், காயப்பட்டோர் அனைவருக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ், தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுவது உலகறிந்த விடயம். எனது தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் அரசாங்க அதிபர் குரூஸ், கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யுமாறு கோரி மன்னார் மக்கள் நடாத்த முயன்ற ஆட்சேப ஊர்வலம் தடை செய்யப்பட்டுள்ளது. மன்னார் அரசாங்க அதிபரைத் தடுத்து வைப்பதற்குத்

தகுந்த காரணம் எதுவும் கிடையாது. நிரபராதியான அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு நான் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அதேபோல, கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ஒருவரும் அர்த்தமற்ற காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். டாக்டர் அலெக்ஸ் வின்சென்ற் என்ற இந்த மருத்துவரின் தடுப்புக் காவல் அர்த்தமற்றது. அவரையும் விடுதலை செய்யுமாறு அரசுக்கு நான் கோரிக்கை விடுக்கிறேன். கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! அவசரகாலச் சட்டம் எவ்விதம் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதற்கு இந்தக் கைதுகளும் தடுப்புக் காவல்களும் நல்ல உதாரணங்களாகும்.

களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்ட காலமாக வாடிவதங்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையை இச்சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சுமார் 800 அரசியல் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ளனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒரு வருடத்துக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் காற்பங்கினர் இரண்டு வருட காலமாக அங்கே வாடுகின்றனர். அங்கு மூன்று வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் உள்ளது. இவர்கள் மீது எந்த வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இவர்கள் மீது உடனடியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, இவர்கள் நிரபராதிகள் என்று கருதப்படும் பட்சத்தில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன். இந்த அரசியல் கைதிகள் சபையிலே இந்த அரசியல் கைதிகளின் சார்பில் நான் நீதி கோரி நிற்கின்றேன். இந்தப் பிரச்சினை, ஒரு மனிதாபிமான ரீதியிலே கையாளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். குறுகிய நேரத்தில் எனது பேச்சை முடிக்க வேண்டியிருப்பதனால், இன்னுமொரு விடயத்தை இங்கு கூறி, எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

இனியாவது யுத்தத்தை நிறுத்தி, புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடாத்த அரசு முன்வர வேண்டும். அரசாங்கம்

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் இந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முன்வர வேண்டும். ஆனால், இன்னும் அரசு அதைப்பற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. எனவே, அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இனியாவது நியாயமான தீர்வை முன்வைத்து மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, எங்களுடைய மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, அவர்களின் துன்ப துயரங்களைப் போக்க வேண்டும். என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கின்றேன். நன்றி; வணக்கம்.

**10.11.1999**

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே! உங்களுக்கு நன்றி. எமது தேர்தல் மாவட்டமான வன்னியில் கடும் போர் தொடர்ந்தும் நிகழ்ந்துகொண்டிருக்கும் நேரத்தில், அந்தப் போரின் நேரடி விளைவான அவசரகால நிலையின் நீடிப்பை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்காக நான் இங்கு எழுந்து நிற்கின்றேன்.

நாட்டின் தலைமைப் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு இருக்கும் இந்த நேரத்தில், போர்முனைச் செய்திகள் மீது கடும் தணிக்கை விதிக்கப்பட வேண்டிய கட்டாயம் - நிர்ப்பந்தம் - அரசுக்கு ஏற்பட்டிருப்பது அனுதாபத்திற்குரியது. ஏனெனில், அரசாங்கமும் ஜனாதிபதியும் சமாதானத்தை மீண்டும் கொண்டு வருவதாகக் கூறி, அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு ஆதரவு கோரி, மீண்டும் ஒரு தேர்தல் வெற்றியை நாடி நிற்கும் வேளையில் இந்த நிலைமை ஏற்பட்டு இருப்பதுதான். இது உண்மை.

வன்னிப் போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த சில நாள்களில் ஈட்டி இருக்கும் மின்னல் வேக வெற்றிகள், தொடரும் போர், எதிர்காலத்தில் எத்தகைய தாக்கங்களையும் நிலைப்பாடுகளையும் ஏற்படுத்தக்கூடியன என்பதை அறிவு படைத்த அனைவருக்கும் அப்பட்டமாகக் காட்டி இருக்கின்றன. அறிவு பூர்வமாகச் சிந்திப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் காலம் இன்னும் கடந்துவிடவில்லை. இந்த

இலங்கைத் தீவின் இளைய தலைமுறையைத் தொடரும் போரில் தினமும் பலியிட்டுக் கொண்டு, குளிரூட்டப்பட்ட சூழலில் இருந்தபடி வரட்டுத் தேசாபிமானம் பேசுவதில் அர்த்தம் இல்லை. போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றியும் அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றியும் கடந்த காலத்தை விடத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய நேரம் இதுவாகும். ஆனால், போர்முனையில் காட்சிகள் மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுவரும் கட்சி மாற்றங்களைச் செய்தி ஊடகங்கள் பெரிதாக அறிவித்துக் கொண்டிருக்கையில், வன்னிப் போர்களத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் காட்சி மாற்றங்களுக்குத் தணிக்கை விதிக்கப்பட்டிருப்பதை நினைத்து அழுவதா? சிரிப்பதா? என்ற நிலையில் இந்நாட்டு மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். போர் தொடர்பான செய்தித் தணிக்கையைக் கொண்டுவந்து விட்டு, போர்க்களத்தில் இப்படி நடக்கிறது, அப்படி நடக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சினூடாக அரசாங்கம் சொல்வதையெல்லாம் அப்படியே நம்புவதற்கு இந்தநாட்டு மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல.

கௌரவ தலைவர் அவர்களே! முதலில் போர் தொடர்பான செய்தித் தணிக்கை நீக்கப்படவேண்டும். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியும் உரிமை ஒவ்வொரு பிரசைக்கும் உண்டு. அந்த உரிமை ஒட்டுமொத்தமாக மறுக்கப்பட்டிருப்பது, அரசாங்கத்தின் அடுத்து வரும் அறிக்கைகளைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. அடுத்து ஆறு ஆண்டுகளுக்கு நாட்டின் தலைமையைத் தனதாக்கிக் கொள்ள வேண்டிய நிலையிலுள்ள அரசாங்கம், இன்று என்ன நடக்கிறது என்பதை மக்களுக்குத் தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். உண்மையை மறைப்பதன் மூலம் பொய்கள் நிலைக்கும் என்று நம்பிவிடக் கூடாது.

கௌரவ தலைவர் அவர்களே! போரின் கொடூரம் மிகத் தீவிரமடைந்திருக்கும் இவ்வேளையில், போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்கின்றேன். போர் நிறுத்தமா? என்றுகூடச் சிலர் கேட்கலாம். நல்ல காரியத்துக்கு நேரம், வேளை

என்று எதுவும் கிடையாது. கடந்த காலத்தில் தமிழ் இனத்தின் சார்பிலே என்னைப் போன்றவர்கள் போர் நிறுத்தம் வேண்டுமென்று இந்தச் சபைக்கு உள்ளும் புறமும் கோரியபோதெல்லாம், அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை. யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்டோம்; வன்னியைப் பிடித்துவிட்டோம்; போரை முடிப்போம் என்ற உத்வேகத்தையே கடந்த காலத்தில் நாம் தொடர்ந்து சந்தித்திருக்கிறோம். கனவுலகத்தில் வாழ்வதைவிட்டு, இனியாவது யதார்த்தபூர்வமாகச் சிந்திப்போம். இல்லையேல், 21 ஆம் நூற்றாண்டில் இந்த இலங்கைத் தீவைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

கௌரவ தலைவர் அவர்களே! போர் தொடர்ந்து கொண்டிருக்கு-மானால், தம்மால் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க முடியும் என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் நிருபித்துக் கொண்டிருக்கிறது. உரிய வேளையில் புலிகள் இயக்கத்துடன் தான் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகச் சில நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். புலிகள் இயக்கத்தை அடக்கிய பிறகே, முடக்கிய பிறகே - பேச்சுவார்த்தை எனும் பகற்கனவை விட்டுவிட்டு, போரில் தினமும் மடியும் இளைய தலைமுறையினரையும் போரை வெறுக்கும் பொது மக்களையும் காப்பாற்றுவதற்கு, இனியாவது போரை நிறுத்தி அரசியல் தீர்வு காண ஜனாதிபதியும் அரசாங்கமும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த மாதம் 17-10-99 அன்று மன்னாரில் ஒரு காவலரண் தாக்கப்பட்டது. அதன் பின்னர் 18-10-99 இரவு வங்காலைக் கிராமம் அங்கிருந்த காவலர்களால் எரிக்கப்பட்டது; அந்தக் கிராமத்தில் இருந்த மக்கள் அடித்து நொருக்கப்பட்டார்கள். வங்காலைக் கிராமத்துக்கு இரண்டு கிலோமீற்றர் தூரத்தில்தான் காவலரண் தாக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. ஆனால் அந்தக் கிராமத்தில் இருந்த மக்களை அங்கிருந்த காவலர்கள் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். அந்த மக்கள் தொழில் செய்கின்ற உடைமைகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. நான் நேரடியாகச் சென்று அவற்றைப் பார்வையிட்டேன்.

இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். அதாவது வங்காலையில் இருக்கும் குருவானவர் மிகவும் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார். அங்கிருக்கின்ற 'சென்றிப் பொயின்ற்' இல் கர்ப்பிணிகள், வயதானவர்கள், சுகவீனமுள்ளவர்கள் என யாராக இருந்தாலும் இறங்கி நடந்துதான் செல்ல வேண்டும். அடிப்படையான ஒரு நிர்ப்பந்தம் அந்த வங்காலைக் கிராமத்தில் இன்றும் கூட இருந்து வருகின்றது. சம்பவங்கள் இடம்பெற்று ஒரு மாதத்திற்குப் பின்னரும் இன்றுவரை அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைவிட, அங்கே கடற்றொழில் செய்பவர்களின் உடைமைகளெல்லாம் அழிக்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அத்துடன் நடந்த அனர்த்தங்கள் சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்தி, அந்தச் சம்பவங்களில் ஈடுபட்ட காவலர்களைத் தண்டிக்கவும், அவர்களை உடனடியாக அங்கிருந்து இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்தப் போரை நிறுத்த அரசு முன்வந்தால், புலிகள் இயக்கமும் அதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும், ஒத்துழைத்தேயாக வேண்டுமென்று கூறிக்கொண்டு, எனது பேச்சை முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

**07.12.2000**

கௌரவ குழுக்களின் பிரதித் தவசாளர் அவர்களே! இந்த அவசரகாலச் சட்டத்தை எமது கட்சி தொடர்ந்து எதிர்த்தே வந்திருக்கின்றது. அண்மையில் மடுத்தேவாலயத்தில் நடைபெற்ற அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கும் இறந்தவர்களின் உறவினர்களுக்கும், அதுபோல் வவுனியாவில் இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதல்களினால் இறந்தவர்களின் உறவினர்களுக்கும் மற்றும் காயப்பட்ட மக்களுக்கும் என் சார்பிலும் எமது கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பிலும் எனது அனுதாபங்களையும் கவலையையும் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மடுவில் நடைபெற்ற அனர்த்தத்துக்கு யார் காரணமென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அச்சம்பவம் பற்றி ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும், அதனை யார் செய்திருந்தாலும் அது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்; அது மிருகத்தனமான ஒரு செயல் என்பதையும் நாங்கள் ஏற்கனவே சொல்லியிருந்தோம். இதை யார் செய்தார்களென்பதை உண்மையிலேயே நாங்கள் உடனடியாகக் கண்டுபிடித்தாக வேண்டும். அது மட்டுமல்ல, இந்தப் புனிதத் தலங்கள் புனித இடங்களெல்லாம் குறிப்பாக மடுத் தேவாலயம் உட்பட வடக்கு கிழக்கில் இருக்கின்ற கோயில்கள், புனிதத் தலங்கள் அமைந்துள்ள இடங்களெல்லாம் உண்மையில் சமாதானப் பிரதேசங்களாக, யுத்த சூனியப் பிரதேசங்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அங்கு யாருமே ஆயுதங்களுடன் நடமாடவோ, அங்கு எந்தவோர் ஆயுத நடவடிக்கையிலும் ஈடுபடவோ கூடாதென்பதை அறிவிக்க வேண்டும். அரசாங்கம் முழு முயற்சியுடன் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.

சண்டை நடைபெறுகின்ற போதெல்லாம் எமது மக்கள் தஞ்சமடைகின்ற இடங்களாக, அவர்களுக்குத் தஞ்சமளிக்கின்ற கோயில்களாக இந்தப் புனிதத் தலங்கள் தான் விளங்குகின்றன. ஆகவே சண்டையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினரும் இந்தப் புனித தலங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு தங்களுடைய போர்க் கருவிகளைக் கொண்டு செல்லவோ, தங்களுடைய போர் யுத்திகளை அங்கு மேற்கொள்ளவோ வேண்டாமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வதுடன், இந்தப் புனிதத் தலங்கள் அமைந்துள்ள இடங்கள் சமாதானப் பிரதேசங்களாக யுத்த சூனியப் பிரதேசங்களாக உடனடியாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் முன் வைக்க விரும்புகின்றேன்.

அது மட்டுமல்ல, மடுத் தேவாலயத்தில் நடைபெற்ற அனர்த்தத்துக்குப் பின்பு, சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் உணவுப் பற்றாக்குறை, குழந்தைகளுக்கான பால்மா பற்றாக்குறை என்பன பாரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. அதுபோல் எரிபொருள் பற்றாக்குறையால்

அங்குள்ள நெல் வயல்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் எமது ஆயர் இராயப்பு அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் வன்னிக்குச் சென்று, அங்கே இருக்கின்ற மக்களைச் சமய வேறுபாடின்றிப் பார்வையிட்டு, அவர்கள் படுகின்ற கஷ்டங்களையும் அந்த மக்களின் தேவைகளையும் பத்திரிகைகள் வாயிலாக வெளிக்கொணர்ந்ததோடு, ஜனாதிபதி அவர்களுக்கும் அறிவித்திருந்தார்கள். அதற்காக ஆயர் இராயப்பு அவர்களுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவர்களுடைய சேவை சமய பாகுபாடின்றித் தொடர்ந்து நடைபெற வேண்டும். அவர்களின் இந்த நடைமுறையால் எங்களுடைய மக்கள் படுகின்ற துன்பங்களை, வேதனைகளை அவர்கள் ஓரளவு வெளிக்கொணர்வதால் - அந்தத் துன்பங்களையும் வேதனைகளையும் நாங்களெல்லோரும் உணரக்கூடியதாக இருக்கின்றது. அந்த மக்களுக்கான நிவாரணத்தை அனுப்பி வைப்பதற்கு எல்லோரும் சேர்ந்து குரல் கொடுத்து, அவர்கள் செய்யும் சேவை மேலும் தொடர உதவ வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, அண்மையில் அம்பாறையிலும் யாழ்ப்பாணத்திலும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் கொடுக்கப்பட்டதாக அறிகிறோம். அதற்காக முதற்கண் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்நிலையில், மற்றைய மாவட்டங்களில் ஏன் தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவது தள்ளிப் போடப்பட்டு வருகின்றன? ஏன் அவை துரிதப்படுத்தப்படாமல் பின்போடப்பட்டிருக்கின்றன என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்த நிலைமை மாறுமானால், நிச்சயமாக ஆசிரியர் பற்றாக்குறை ஏனைய மாவட்டங்களிலும் நிவர்த்தி செய்யப்படலாம். ஆகவே, இந்த தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனங்களை ஏனைய மாவட்டங்களிலும் உடனடியாக வழங்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்; இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வை முன்வைக்க வேண்டுமென்று நாங்கள் ஏற்கனவே கூறி வந்திருக்கின்றோம். அதற்கு இன்னும் காலங்கடந்து விடவில்லை. அரசாங்கம் இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவந்து, ஒரு சமாதானத் தீர்வை முன்வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக்கொடுத்த உங்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**06.04.2000**

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! அவசரகால நிலைமையை நீடிப்பதற்கான இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் இங்கு பேச எழுந்து நிற்கின்ற இவ்வேளையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு பெரும் மோதல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த பல தினங்களாக நிகழ்ந்து வரும் இந்த இராணுவ மோதலின் விளைவாக, பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்கள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்; பல பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்; மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மோதல் நிகழும் பிரதேசத்திலுள்ள பளை, கிளாலி ஆகிய இடங்களில் ஆயுதப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சுமார் 5000 பொது மக்கள் உடனடியாகவே அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல விரும்பிய போதிலும் அவர்கள் அனைவரும் ஆயுதப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிளாலி தேவாலயத்திலும் பாடசாலையொன்றிலும் தஞ்சமடைந்திருக்கும் சுமார் 1500 பொது மக்கள், ஆயுதப் படைகளால் கடந்த வாரம் முதல் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த ஞாயிறன்று பல மணித்தியாலங்கள் தமது தாக்குதல் நடவடிக்கை-

களை நிறுத்தி வைத்திருந்தபோதிலும், அரச படையினர் அதற்கு எதிர்மாறான நடவடிக்கையில் இறங்கி அப் பொதுமக்களை வெளியேறவிடாமல் தடுத்து வைத்துள்ளனர். இந்த ஐயாயிரம் பொது மக்களும் அரச படைகளால் மனிதக் கேடயங்களாக்கப்பட்டுள்ளனர். இது மட்டுமன்றிப் பளையை அண்டியுள்ள பல கிராமங்களிலும் சுமார் முப்பதாயிரம் பொது மக்கள் நிர்க்கதியாகியிருக்கின்றனர். இவர்களும் அங்கிருந்து வெளியேற அரச படையினர் அனுமதிக்க வேண்டும். இந்தப் பொது மக்களில் கணிசமானோர் வயிற்றோட்டம், மலேரியா போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள், முதியவர்கள்., பெண்கள் உட்பட அங்கிருக்கின்ற இந்த 5000 பொது மக்களினதும் நிலைமை மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. இவர்களை தடுத்து வைத்திருப்பதன் மூலம் பொது மக்களின் உயிருக்கும் பாதுகாப்புக்கும் அரசாங்கம் எத்தகைய மதிப்பை அளிக்கின்றதென்பது முழு உலகினாலும் தெட்டத்தெளிவாக உணரப்பட்டிருக்கின்றது. போர் நிகழும் பிரதேசத்தில் நிர்க்கதியாகியிருக்கின்ற பொது மக்கள் அனைவரும் அங்கிருந்து தாம் விரும்பும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உடனடியாக அனுமதிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இவ்விடயத்தில் திட்டவட்டமான ஒரு பதிலை கௌரவ பாதுகாப்புப் பிரதி அமைச்சரவர்களிடமிருந்து நான் எதிர்ப்பார்க்கின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! கடந்த 3ஆந் திகதி திங்கட்கிழமையன்று காலையில் கொழும்பு, விஹாரமஹாதேவி பூங்காவிற்கு அருகாமையில் உள்ள பரிசோதனை நிலையத்தில், வழி இலக்கம் 155 கொண்ட பஸ் வண்டியொன்றிலிருந்து இறக்கப்பட்டு, அண்மையிலுள்ள பொலிஸ் நிலையமொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தமிழ் மாணவி - அவர் என்னுடைய கிராமத்தைச் சேர்ந்த ஒருவர். அங்கு வைத்துச் சுமார் மூன்று மணி நேரம் 'சிகரட்' டால் சுடப்பட்டும் சவர அலகினால் கீறப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த அப்பட்டமான மனித உரிமை மீறல் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு கிடைத்ததும் உரிய

நடவடிக்கையில் ஈடுபட்ட மோதரைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களுக்கும், மேல் நடவடிக்கைகள் எடுக்க உத்தரவிட்ட கொழும்பு, உதவிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே அவர்களுக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தச் சம்பவம் எந்தப் பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்ததென்பதைக் கட்டாயமாகக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த மாணவியை விடுதலை செய்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரால் இந்த விடயத்தில் உதவ முடியும். சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால், அது கேலிக்கூத்தாகிவிடும். எனவே, இவ்விடயத்தில் பூரண விசாரணை நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! ஒரு புறம் போர் கொடூரமாக நிகழ்ந்து கொண்டும் மறுபுறம் சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டும் இருக்கின்ற இவ்வேளையில், உடனடியாக ஒரு போர் நிறுத்தம் தேவை. எனவே, இப்போதாவது போர் நிறுத்தமொன்றை அறிவிக்க அரசு முன்வர வேண்டும். அவ்விதம் செய்தால் விடுதலைப்புலிகள் அதற்கு ஒத்துழைப்பு நல்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதைக் கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**06.07.2000**

கௌரவ அவைத் தலைவர் அவர்களே! அவசரகாலச் சட்ட நீடிப்பின் மீதான இந்த விவாதத்தில் கலந்து கொண்டு தொடரும் போரின் காரணமாக, இந்த அவசரகாலச் சட்ட நிலைமையின் கீழ் எமது மக்கள் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நரக வாழ்க்கையை அந்தச் சபையின் முன்பாகவும், இதனூடாக அகில உலகின் முன்பாகவும் சுட்டிக் காட்டுவது எனது கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வவுனியா, மன்னார் நகரங்களிலும் அவற்றை அண்டியுள்ள கிராமங்களிலுமிருந்து அங்கேயுள்ள பொதுமக்கள் திடீரென்று மர்மமான

முறையில் காணாமற்போகும் சம்பவங்கள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து வருகின்றன. இப்படிக் காணாமற்போனவர்களில் சுமார் 20 பேர் வரையில் வவுனியாவிலுள்ள இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது. ஏனையோருக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம். அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் பற்றி அவரின் மிக நெருங்கிய உறவினரொருவருக்குத் தகவல் கொடுக்க வேண்டிய பொறுப்பு, கைது செய்யும் படையினர் அல்லது பொலிசாரைச் சார்ந்துள்ளது. அவ்வாறு செய்யாமல் பொதுமக்களைக் கைது செய்து முகாம்களிலே சிறை வைப்பது சட்ட விரோதமானது. இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. வவுனியாவில் காணாமற்போயிருக்கும் சுமார் 25 பொதுமக்களின் நிலை என்ன? இவர்களை கைது செய்தது யார்? அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பது பற்றி எந்தத் தகவலும் இல்லை. இவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனரா? உயிருடன் இருக்கிறார்களென்றால், எங்கே? இந்தக் கேள்விகளுக்குப் பதில் வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே! நாட்டில் மர்மக் கடத்தல்களும் மர்மக் கொலைகளும் தொடர்ந்து கொண்டிருக்கையில், மனித உரிமைகளைப் பற்றிப் பேச இந்த நாட்டின் அரசாங்கத்திற்கு எந்தத் தகுதியும் கிடையாதென்பதைத் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு - கடந்த மாத மத்தியில் வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் பொலிசாரால் அடிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்களில் ஒருவர் மறுநாள் இறந்துவிட்டார். மற்றையவர் சித்த சுவாதீனமற்ற நிலையில் நரம்பியல் சிகிச்சைக்காகக் கடந்த வாரம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார். இந்த இரண்டு இளைஞர்களும் யாவர்? அவர்களைக் கைது செய்தது யார்? எங்கே கைது செய்தார்கள்? வவுனியா வைத்தியசாலையில் இறந்த இளைஞரின் மரணம் ஒரு கொலை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மற்றைய இளைஞரின் பரிதாப நிலைக்குக் காரணம் பயங்கரச் சித்திரவதைகள் என்பது வெளிப்படையாகும். இந்த இரண்டு

இளைஞர்களும் வெலிஓயா பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டவர்களென்று சில தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த விடயத்தில் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றமிழைத்தவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் இவையெல்லாம் நடக்குமென்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில், கடந்த வருடம் மார்கழி மாதத்தில் புங்குடுதீவு, கண்ணகை அம்மன் கோயில் குருக்களின் மகள் சாரதாம்பாள், கடற்படையினர் சிலரால் கற்பழிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்பான குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டிருப்பது எமக்குத் தெரியும். இதுவரையில் அந்தக் குற்றவாளிகளில் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை.

அப்பாவித் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் உயிர்களுக்கும் இவ்விதம் தொடர்ந்து வேட்டு வைக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அரசியல் தீர்வு பற்றித் தினமும் அரசாங்கம் பேசிக் கொண்டிருக்கின்றது. களுத்துறைச் சிறைச்சாலை உட்பட இந்த நாட்டிலுள்ள பல்வேறு சிறைகளிலும் தொடர்ந்து விசாரணைகளின்றி வாடிக்கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் பரிதாபநிலையை இந்தச் சந்தர்ப்பத்தில் இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். கடந்த தை மாதம் 5ஆம், 7ஆம் திகதிகளில் களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களினால் இரண்டு கைதிகள் உயிரிழந்தனர்; மற்றும் பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உட்படப் பல கைதிகள் வெலிக்கடை, கண்டி, காலி, பதுளை போன்ற இடங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். இப்போது 100 கைதிகளுக்கு மேல் பூஸா சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்தச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட அரசியல் கைதிகளுக்கு அவர்களது உறவினர்கள் உணவுப் பொருள்களைக் கொண்டு சென்று கொடுக்கவும் அனுமதி மறுக்கப்படுகின்றது. இந்தச் சிறைச்சாலைகளில் நோய் வாய்ப்படும் கைதிகளுக்கு மருத்துவ வசதிகள் கிடையாது.

அதே நேரத்தில் வவுனியா மேல்நீதிமன்ற வழக்குகளுக்காக அனுராதபுரச்சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் தமிழ் அரசியல் கைதிகள், ஒரே அறைக்குள் பதினைந்து பேர் வீதம் அடைத்து வைக்கப்படுகின்றார்கள். அந்த அறைகளிலே சுகாதார வசதிகள் இல்லை. அதனால் இரவில் இயற்கைக் கடன்களை வாளிகளில் கழிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அனுராதபுரச் சிறைச்சாலையில் தண்ணீருக்கத் தட்டுப்பாடு நிலவுகின்றது. குளிக்க மாத்திரமல்ல, முகம் கழுவக்கூட முடியாத நிலை அங்கே ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் அரசியல் கைதிகளும் மனிதர்கள் அவர்களும் இந்த நாட்டுப் பிரசைகள். எனவே, அவர்களை மனிதர் களாக நடந்த அரசு முன்வர வேண்டும். பாதாள உலகின் பயங்கரக் கேடிகள், சிறைச்சாலைகளில் விளக்கமறியல் கைதிகளாக சுகமாக வாழ்க்கை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பலரும் தெரிந்ததே. அரசியல் கைதிகளைக் கொடுமைப்படுத்துவது, அரசியல் காட்டுமிராண்டித்தனம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வன்னிப்பகுதியில் இன்று அத்தியாவசிய மருந்துகள் கிடையவே கிடையாது. 'பனடோல்' ஒன்று அங்கு பதினைந்து ரூபா, இருபது ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அங்கே தட்டுப்பாடாக இருக்கும் மருந்துகளை அரசாங்கம் அனுப்புவதாகக் கூறியும் அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது? உயிர் காக்கும் மருந்துகளை வன்னிப் பகுதிக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் மறுத்து வருவதேன்? புலிகளுடன் நடத்திக் கொண்டிருக்கும் போரில் தமிழ் மக்களை அரசாங்கம் பகடைக்காய்களாகக் கருதுகிறது என்று நான் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன். தொடரும் போரின் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக இருக்கும் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் கூட போதிய அளவில் வழங்கப்படவில்லை. போரிட்டுக் கொண்டிருக்கும் பகை நாட்டின் பிரசைகளை நடத்துவது போலவே, இந்நாட்டுத் தமிழ் மக்களை அரசாங்கம் நடத்துகிறதென்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். இந்த நிலைமை நீடித்துக்கொண்டிருக்கையில், அரசியல் தீர்வு தொடர்பாகச் சிலர் உடன்பாடு தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாணம், வட மாகாணத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? என்பது தொடர்பாக

ஒரு சர்வசன வாக்கெடுப்பைக் கிழக்க மாகாணத்தில் நடத்துவதற்கு அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியும் உடன்பாடு கண்டுள்ளன. இதுதான் நிலைமையென்றால், இந்த நாட்டை யாரும் காப்பாற்ற முடியாது. ஐக்கிய இலங்கைக்குள் இலங்கை ஒரே நாடு வரையறைக்குள் - தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை ஒரே நிர்வாக அலகாக ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வென்பது ஒருபோதும் ஏற்பட முடியாதென்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

நித்திரை செய்பவர்களை எழுப்பலாம்; நித்திரை செய்வதாக நடிப்பவர்களை எழுப்ப முடியாது. இதனை எமது மக்களும் நன்கு அறிவார்கள். கொடிய போரினால் இந்த நாட்டின் இளைய தலைமுறை எரிந்து சாம்பாலாகிக் கொண்டிருக்கையில், அரசியல்வாதிகள் நித்திரை செய்து நடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் போலி நித்திரைத் தோற்றம் முதலிலே கலைய வேண்டும். இல்லையென்றாம், இந்த நாடு இரண்டாகப் பிளவுபடும் என்பதை நாங்கள் ஒரு போதும் மறுக்க முடியாதென்பதைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**09.08.2000**

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே! இந்த அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்திலே எனது உரையை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்த அவசரகாலச் சட்டம் மூலமாக எமது தமிழ் பேசும் மக்கள் எந்த அளவுக்கு நசுக்கப்படுகிறார்கள். கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். நிந்திக்கப்படுகிறார்கள் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இந்த அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு அரசாங்கம் எமது மக்களை நசுக்கி, ஒடுக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைப் பொறுத்த வரையில், அந்த இயக்கத்தைச் சேர்ந்த நான், இந்த அவசரகாலச்சட்டத்தை இன்றும் எதிர்ப்பேன் என்று

கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எங்களுடைய இனத்தின் மீது திணிக்கப்படுகின்ற இந்த அவசரகாலச் சட்டத்தை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம் என்று இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் அண்மையில் எனது மாவட்டத்திலுள்ள வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றிருந்தேன். அங்கு எமது மக்களின் குறைகளைக் கண்கூடாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவர்கள் படும் வேதனைகளையும் கஷ்டங்களையும் நேரடியாகப் பார்த்தேன். எனக்கு முன் இங்கு பேசிய பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா அண்ணன் அவர்கள் கூறியது போலவே, நிரந்தரமாகவே படைகளுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே, நிரந்தரமாகவே அவர்கள் அந்தப் பகுதிகளில் தங்கியிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே, அரசாங்கம் ஒரு சட்ட விதியைப் பிரகடனப்படுத்துகின்றார்கள். எனவே, அங்கு ஒரு சட்ட விதியைப் பிரகடனப்படுத்துகின்றது. ஆனால், அங்கு அந்தந்த பகுதிகளிலே நிலை கொண்டிருக்கின்ற படையினர் வேறு வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் படையினர்தாம் சட்ட விதிகளை விதிக்கின்றார்கள். அந்தத் தமிழ் பேசும் மக்கள் அவர்கள் விதிக்கின்ற அந்தச் சட்டவிதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் கோருகின்றார்கள்.

உதாரணத்திற்குச் சில விடயங்களைக் கூறலாம். மன்னாரைப் பொறுத்த மட்டிலே அங்கே வாழ்கின்ற மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதனூடாகக் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டே தங்களுடைய உணவுத் தேவை மற்றும் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவு புகட்டுதல் போன்ற அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். எனவே, அவர்கள் கடலை நம்பித்தான் வாழ்கிறார்கள். அவர்களால் பிடிக்கப்படுகின்ற மீனின் விலை, கொழும்புச் சந்தையில் விற்கப்படும் மீனின் விலைக்கு ஈடானதாக இருக்கின்றது; சமமானதாக இருக்கின்றது. காரணம் அங்கே படைகளினால், அதாவது கடற்படையினரால் மற்றும் பாதுகாப்புப்படையினரால் பொலிஸாரினால் நினைத்த நேரத்திலே நினைத்த சட்டவிதிகள் அங்கு பிரகடனப்படுத்தப்பட்டு, மீன் பிடிக்கச் செல்ல முடியாதவாறு எங்களுடைய மக்கள்

நிந்திக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதனால்தான், மக்கள் சாப்பிடுகின்ற மீனின் விலையும் இவ்வாறு அதிகரித்திருக்கின்றது. அங்கே பாதுகாப்புப் படையினர் திடீரெனச் செல்வார்கள். "கரையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரைதான் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டும்" என்று இன்னொரு நாள் திடீரென்று சொல்வார்கள், "இன்று கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம்" என்று முதலில் ஆறு லீற்றர் எரிபொருளைக் கடலுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கும் பாதுகாப்புப் படையினர் திடீரென்று சொல்வார்கள் இல்லை ஆறு லீற்றர் எரிபொருளைக் கொண்டு செல்ல வேண்டாம். ஐந்து லீற்றர் கொண்டு போங்கள்" அல்லது 3 லீற்றர் கொண்டு போங்கள்" என்று உதாரணத்திற்கு நான் நேரடியாகக் கண்ட சம்பவம் ஒன்றை இங்கு கூறுகின்றேன். அதாவது, பள்ளிமுனையில் கடற் படைத்தளம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே இருந்த பொலிஸார் அறுபது லீற்றர் மண்ணெண்ணெய் கொண்டு செல்வதற்கு முன்னர் அனுமதி வழங்கினார்கள். அதிலும் 'ஒயில் கலக்கப்பட்ட அறுபது லீற்றர் மண்ணெண்ணெயே கொண்டு செல்வதற்கு பொலிஸார் அனுமதித்தார்கள். அங்கே கடத்தல் என்ற போர்வையில் சில அசம்பாவித நடவடிக்கைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டாம் என்று நான் கூறவில்லை. ஆனால், அதைச் சாக்காக வைத்து, அங்கே மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களின் வயிற்றிலே அடிக்க வேண்டாம் என்று நான் கேட்கின்றேன்.

இன்று 25 கிலோ எரிபொருளைக் கொண்டு செல்வதற்கு அங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. லீற்றர் அளவை மூலம் தான் எரிபொருளை அளவிடுவார்கள். ஆனால் கிலோ அளவை முறையில் எரிபொருள் அளவிடப்பட்டதை நான் கேள்வியுற்ற தேயில்லை. அவ்வாறு எரிபொருள் அளவிடப்படுவதை நான் இன்றுதான் கேள்வியுறுகின்றேன். அளந்து பார்த்துக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கின்றார்கள். குறித்த அளவை விட அரை லீற்றராவது கூடுதலாக இருந்தால், அந்த மேலதிக எரிபொருளைக் கீழே ஊற்றி விடுகின்றார்கள்.

'மீனவர்கள் காலை ஆறு மணிக்குக் கடலுக்குச் சென்று பிற்பகலில் கரை திரும்பலாம்' என்று முன்னர் சொன்ன படையினர், '

காலை எட்டு மணிக்குச் சென்று பிற்பகல் இரண்டு மூன்று மணிக்குள் கரை சேர்ந்து விட வேண்டும்' என்று இப்போது கூறுகின்றார்கள். கடலில் இரண்டு கிலோ மீற்றர் தூரம் மாத்திரம் போவதானால், அவர்கள் கடலின் கரையிலே நின்றுதான் மீன் பிடிக்க முடியும். எனவே, எங்களுடைய மீனவர்கள் அங்கு மீன் பிடிக்க ஓர் அளவாவது சுதந்திரம் வழங்குமாறு எங்களுடைய அந்த இனத்தின் சார்பாக கேட்கின்றேன். அங்குள்ள நிலையைப் பற்றி ஒரு விடயத்தை கூறுகின்றேன். அதாவது எங்களுடைய மீனவர்கள் இரவிலே கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடியாது. ஆனால், இந்திய மீனவர்களின் 'ட்ரோலர்' கள் தலைமன்னார், பேசாலை போன்ற கடலில் எங்களுடைய கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரம் வரை இரவில் வந்து மீன் பிடித்துச் செல்லக்கூடிய ஒரு நிலைமை அங்கு இருக்கின்றது. அதனைத் தட்டிக் கேட்பதற்கு யாருக்கும் தைரியம் எங்கிருந்து வந்தது? வரவில்லை. ஆனால், எங்களுடைய தமிழ் மீனவர்கள் இரவில் கடலில் தொழில் செய்வதைத் தடுப்பதற்கு தைரியம் எங்கிருந்து வந்தது? இந்திய மீனவர்கள் மீன் குஞ்சு உற்பத்தியாகின்ற - மீன் உற்பத்தியாகின்ற இடங்களுக்கெல்லாம் வந்து 'ட்ரோலர்' களின் மூலம் மடி போட்டு இழுத்துச் செல்கின்றார்கள். ஆனால், எங்களுடைய மக்கள் இரவிலே சென்று மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு அவர்களுக்குள்ள உரிமை மறுக்கப்படுகின்றது. அவர்கள் காலையிலே 8.00 மணிக்குச் செல்லவேண்டும். அதற்கிடையில் இந்திய மீனவர்கள் 'ட்ரோலர்' வந்து அபகரித்துச் சென்று விடுவார்கள்; அவர்களுடைய வலைகளையும் கொண்டு போய்விடுவார்கள். எங்களுடைய மீனவர்கள் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வர வேண்டிய சூழ்நிலை அங்கு இருக்கிறது. ஆகவே, தயவு செய்து இது பற்றி இந்தியாவுடன் பேசுங்கள்! இந்திய எல்லையைத் தாண்டி எங்களுடைய எல்லைக்குள் அவர்கள் வரவேண்டாம் என்று சொல்லுங்கள்! எமது நாட்டில் மீன் உற்பத்தியாகும் இடங்களுக்கு வந்து மீன்களைப் பிடித்துச் செல்லவேண்டாம் என்று சொல்லுங்கள்! எமது மக்களை இரவிலே கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று தடை செய்கிறீர்கள். ஆனால், இரவிலே இந்தியாவிலிருந்து வருகின்ற 'ட்ரோலர்' களின் மூலம் வந்து விடுதலைப்புலிகள் படைமுகாம்களைத் தாக்கமாட்டார்களா? இது என்ன நியாயம்? ஆகவே இவற்றைக் கவனத்திலெடுத்து இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துவதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிப்பு சிலாவத்துறை போன்ற இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் மீள் குடியேற்றங்கள் நடைபெற்றன. "அங்கு தொழிலுக்குச் சென்றால் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட தூரம்வரை சென்றால் கடற்படையினர் சுடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக அந்த மக்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. அங்குள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதில்லை. ஏனோ, தானோ என்று யாருமே கண்டுகொள்ளாத நிலைமையில் அங்கே குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல தடவைகள் அரச அதிபரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். என்னையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை நாங்கள் எடுத்தும்கூட, அந்த மக்களை யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. எனவே அவர்களை வேறு இடத்தில் குடியேற்றுங்கள்; அல்லது அவர்களுக்கு நிவாரணம் வழங்குங்கள். பாதுகாப்புக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்காக மக்களைச் சாவதற்கு அனுமதிக்காதீர்கள்! என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று மன்னாரைப் பொறுத்தவரையில், அங்கு புதிதாகப் பல கடற்படை முகாம்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகவோ என்னவோ, மன்னாரிலிருந்து 10 கி.கிராம் நிறை அடங்கிய ஒரு பொதியைத்தான் தலைமன்னாருக்கு எடுத்துச் செல்ல முடியும். ஆனால் இது இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசமாகும். இராணுவம், கடற்படை சூழ இருக்கும் அப்பிரதேசத்தில் கூட 10 கி.கிராம் நிறை அடங்கிய பொருள்களைத் தான் தலைமன்னாருக்கு கொண்டு செல்ல முடியும். அந்த அளவுக்கு "பாஸ்" நடைமுறை அங்கிருக்கிறது. இதற்கு என்ன காரணமென்று எனக்குத் தெரியவில்லை. ஏன், இந்த நிலைமை? 15 கிலோமீற்றர் தூரம்கூட இல்லாத தலைமன்னாருக்கு 10 கி.கிராம் நிறையுள்ள அரிசியையோ, அல்லது வேறு ஏதாவது பொதியையோ கொண்டு செல்வதற்குப் "பாஸ்" வேண்டுமென்றால், இதில் என்ன நியாயம் இருக்கிறது? மன்னார் நகரத்திலே ஒரு பக்கட் சீமெந்தினை வாங்குவதற்கு "பாஸ்" எடுக்க வேண்டும். இன்று அங்கு சீமெந்தின் விலை பற்றி உங்களுக்குத் தெரியும். சீமெந்தை வாங்குபவன் அதற்கான "பாஸை" ப் பெறுவதற்கு ஐம்பது, நூறு ரூபா செலவழிக்க

வேண்டியிருக்கின்றது. ஆகவே, அன்றாடம் உழைக்கின்ற ஒரு தொழிலாளி ஒரு சீமெந்து 'பைக்கற்' வாங்குவதாக இருந்தால், அதன் உண்மையான விலையை விட ஐம்பது - நூறு ரூபா கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அது மட்டுமல்ல "பாஸ்" எடுக்கவும் அலைய வேண்டியுள்ளது. ஆனால், இவ்வாறான நிலைமைகள் எங்களுடைய நாட்டிலே இருக்கின்றது என்பது கூட இங்குள்ள அதிகம் பேருக்கத் தெரியாது. நாங்கள் இந்த நாட்டிலே தமிழனாகப் பிறந்துவிட்ட காரணத்தினால் இன்றைக்கு பலவிடயங்களில் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்; நிந்திக்கப்படுகின்றோம். அந்த நகரத்திலே பாதுகாப்புப் படையினருடைய பாதுகாப்புப் பிரதேசத்திலே இருக்கின்ற ஒரு தமிழ் மகன், ஒரு 'பைக்கற்' சீமெந்து கொண்டு செல்வதற்கு மறுக்கப்படுகின்றான். எனவே, நான் இங்கு கூறிய குறைபாடுகளை அரசாங்கம் நிவர்த்தி செய்யவேண்டும்; எங்களுடைய மக்களின் தேவைகளை - அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் உணர்ந்து, அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல, அங்கு மக்கள் மன்னாரிலே இருந்து செட்டிகுளம் செல்வதானால், அங்கே மூன்று சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். அந்தப் பாதையில் செல்லும் மக்கள் முதல் சோதனைச் சாவடிகளில் சோதனை முடிந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் சென்றதும் மீண்டும் எல்லோரும் சோதனைக்காக இரண்டாவது சோதனைச் சாவடியில் இறங்க வேண்டும். அதன் பின் நாலு கிலோமீற்றர் தூரம் சென்றதும் அடுத்த சோதனைச் சாவடியில் எல்லோரும் .இறங்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை அந்த மக்கள் ஏறி இறங்கவேண்டியுள்ளது. எனக்கு நேரம் போதாத காரணத்தினால் அதிகம் பேசவில்லை. எனவே, இவ்விடயங்களையும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த படியாக யாழ்ப்பாணத்திலே சுட்டுக்கொல்லப்பட்ட சஞ்சீவன் பற்றிய விடயம், அவன் சுட்டுக் கொல்லப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றது. அவனுடைய கொலை விடயத்தில் எந்தவொரு நீதியும் இன்று வரையும் கிடைக்கவில்லை. எனக்கு முன்

பேசிய உறுப்பினர்கள் அது விடயமாக எடுத்துக் கூறினார்கள். ஆகவே, இந்த விடயத்தில் நியாயம் வேண்டும். இளைஞர்கள் தப்பான வழியில் செல்வதற்கு அரசாங்கம் வழிவகுக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இளைஞர்களைக் கல்வி கற்க விடுங்கள்! அவர்கள் மேற் படிப்புப் படிப்பதற்கு அனுமதி அளியுங்கள்! பாதுகாப்பு என்ற போர்வையிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, தாக்குவது, நிந்திப்பது என்பவற்றின் மூலம், புரட்சி என்ற போர்வையிலே பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இளைஞர்களைத் தூண்டவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, சஞ்சீவன் கொலைக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று நான் கோருகின்றேன். அது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டிலே, இன்று எமது யாழ்ப்பாண மக்கள், பல இடங்களிலே அகதிகளாக, அநாதைகளாக, கைவிடப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அவர்கள் தங்களுடைய சொந்த இடங்களுக்குச் சென்று குடியிருக்கும் வரையும் அவர்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று வவுனியாவிலே திடீர், திடீரென்று ஆட்கள் காணாமல் போகின்றார்கள் இன்று எங்களுடன் உரையாடுகின்ற ஒருவர், அடுத்த நாள் காணாமல் போய்விடுகின்ற நிலை அங்குள்ளது. எந்தப் பொலிஸ் நிலையத்தினராலோ எந்தப் பாதுகாப்புப் படை முகாமினராலோ ஒருவர் கைது செய்யப்பட்டால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஒரு ரசீது கொடுக்கப்பட வேண்டும் என்று அவசரகாலச் சட்டவிதி கூறுகின்றது. ஆனால், அந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பது சந்தேகமாக இருக்கின்றது. எத்தனையோ இளைஞர்கள் காணாமல் போகின்றார்கள்; எத்தனையோ யுவதிகள் காணாமல் போகின்றார்கள். அவர்கள் மட்டுமல்ல, வயோதிபர்களும் காணாமல் போகின்றார்கள்; ஆனால், அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியாது. அவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களது கைது தொடர்பாக ரசீதும் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, கௌரவ பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்கள் இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு,

எமது மக்களுக்குத் தொடர்ந்து நன்மையளிக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, இன்று இங்கு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்; வணக்கம்.

**கௌரவ அவைத்தலைவர் அவர்களே!**

புதிய அரசியல் சாசனத்தின் மீதான இந்த விவாதத்தில் கலந்து கொள்ள எழுந்து நிற்கும் இந்த வேளையில், சொர்க்கத் தீவு என்று அழைக்கப்படும் இந்த இலங்கைத் தீவின் தேசியப் பிரச்சினையாக, 1948ல் சுதந்திரம் அடைந்த சில மாத காலத்திலிருந்து தொடர்ந்து வந்திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் கொண்டுவரப்பட்டிருப்பதாக கூறப்படும் இந்த புதிய அரசியல் சாசனம், இந்த பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு எந்த வகையிலே உதவ முடியும்? என்ற கேள்வியே, எனது மனதில் மேலோக்கி நிற்கின்றது.

இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலே இந்த நாட்டில் ஏகோபித்த கருத்தே நிலவுகின்றது. ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதைப் பொறுத்தமட்டில், பல்வேறு அபிப்பிராயங்கள், பல்வேறு கருத்துக்கள், பல்வேறு சிந்தனைகள் தொடர்ந்து நிலவிக்கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரச்சினையை யுத்தத்தின் மூலமே தீர்க்க வேண்டும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை போர் முனையில் தோற்கடிக்க வேண்டும் - தோற்கடித்து விட்டால் பிரச்சினை தானாகவே தீர்ந்து விடும் என்று கருத்து தெரிவிப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இந்தக் கருத்தைப் பொறுத்த மட்டில், என்னால் ஒன்று மாத்திரமே கூறிக்கொள்ள முடியும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை போர் முனையில் முற்றுமுழுதாக தோற்கடிப்பதன் மூலம் பிரச்சினையை தீர்த்துக் கட்டிவிட முடியும் என்பது அனுதாபத்துக்குரிய ஓர் கருத்தாகும்.

புலிகள் இயக்கம்தான் பிரச்சினை என்றால் இந்த கருத்து சரியாக இருக்கும். ஆனால் உண்மை அதுவல்ல!

இனப்பிரச்சினையால் சிருஷ்டிக்கப்பட்டு, காலப்போக்கில் பாரிய போராட்ட இயக்கமாக, மாபெரும் இராணுவப் பலத்துடன் பரிணாம வளர்ச்சி கண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம், பிரச்சினையின் வெளிப்பாடே தவிர, அதுதான் பிரச்சினை என்று அல்ல!

எனவேதான், பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களில் மிகப் பெரும்பான்மையோர், பிரச்சினைக்கான அரசியல் தீர்வு கட்டாயமாக முன்வைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எப்படி அமைய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் போது, இந்த தீர்வு யாருக்காக? எவருக்காக? எவரின் குறைபாடுகளை களைவதற்காக? எவரின் அபிலாஷைகளை திருப்திப்படுத்துவதற்காக? என்பதை நாம் முதலிலே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இனப் பிரச்சினை இன்று கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது என்றால், இனப்பிரச்சினை ஓர் கொடுமையானதும் கோரமானதுமான யுத்தமாக விஸ்வருபம் எடுத்திருக்கின்றது என்றால், இந்த நிலைமைக்கு அடித்தளமாக அமைந்திருப்பது என்ன என்பதை தயவு செய்து சகலரும் நேர்மையுடனும் நிதானத்துடனும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பல்லாயிரக் கணக்கிலே தமிழ் இளைஞர்களும் யுவதிகளும், தங்கள் வாழ்க்கைக் கனவுகளை எல்லாம் தூர வீசிவிட்டு, தொலை தூரம் விரட்டி விட்டு, ஆயுத பாணிகளாக அணிவகுத்து நிற்பதன் அடிப்படைக் காரணம் என்ன என்பதை சகலரும் அறிவு பூர்வமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கோரச் சுவாலைகளுடன் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் யுத்தப் பெருந் தீயிலே, அச்சம் அறியாத நெஞ்சினராக அலை அலையாக வந்து வீழ்ந்து மடிந்து வரும் இளைய தமிழ்த் தலைமுறையின் மன உணர்வுகள் என்ன? என்பதை சகலரும் கட்டாயமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திக் கொண்டிருக்கும் போராட்டம் வெறுமனே நாடு பிடிக்கும் போராட்டம் அல்ல! வெறுமனே மண்ணைக் கைப்பற்றும் போராட்டம் அல்ல! அது ஓர் விடுதலைப் போராட்டம் - சுதந்திர இயக்கம் என்ற உண்மையை, அது எவ்வளவு கசப்பாக இருந்தாலும் கூட, சகலரும் ஏற்றாக வேண்டும்.

இந்த உண்மை ஏற்கப்படுகின்றதோ, இல்லையோ - அதுதான் யதார்த்தம்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திக் கொண்டிருக்கும் போராட்டம் எண்பதுகளின் ஆரம்பத்திலே உருவான போது, அந்தப் போராட்டத்தின் முன்னணியிலே அந்த இயக்கம் இருக்கவில்லை.

மாறாக, கடந்த காலமாகிப் போய்விட்ட சிவகுமாரன் என்ற இளைஞன் இருந்தார். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலம் அது! அந்தக் காலத்தில் தான், நான் சார்ந்திருக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் தங்கத்துரை, அவரின் வலது கரமாகத் திகழ்ந்த குட்டிமணி என்று அழைக்கப்பட்ட யோகச்சந்திரன் போன்றவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆயுத முனையில் முன்னெடுத்தார்கள்.

1974ம் ஆண்டு யூன் மாதம் 5ந் திகதி சயனைட் அருந்தி சிவகுமாரன் தற்கொலை செய்து கொண்ட பொழுது, முழுத் தமிழ் இனமுமே அவருக்கு மனப்பூர்வமாக தலை தாழ்த்தி அஞ்சலி செலுத்தியது.

1960-64 கால கட்டத்தில், இந்த சபையிலே யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினராக இருந்தவரும், பின்னர் மீண்டும் ஒரு முறை யாழ் நகர மேயராக விளங்கியவருமான அல்பிரட் தங்கராஜா துரையப்பாவை கொலை செய்ய முயன்றதற்காக கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டிருந்த சிவகுமாரன், மீண்டும் பொலிசாரிடம் சிக்கி சித்திரவதைப்படுவதை தவிர்ப்பதற்காகவே தற்கொலை செய்து கொண்டார்.

அல்பிரட் தங்கராஜா துரையப்பா, சிவகுமாரன் மறைந்து ஓர் ஆண்டின் பின்னர் 1975ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர் ஓர் தமிழ் இளைஞர். அப்போது அவரின் வயது 20. பெயர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

அந்த நாளிலிருந்து இந்த நாள் வரையிலே, தொடர்ந்து கொண்டிருக்கும் இளந் தமிழ் சமுதாயத்தின் ஆயுதப் போராட்டத்தில், 1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் வரையில், நான் சார்ந்திருக்கும் ரெலோ இயக்கம் உட்பட பல விடுதலைப் போராட்ட இயக்கங்கள் இணைந்திருந்தன. இயக்க மோதல்கள் ஏற்பட்ட போதிலும், இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் வரையிலே நாம் அனைவரும் தமிழீழ இலட்சியத்திற்காக செயற்பட்டோம்.

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நாம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மாத்திரம் போராட்ட களத்தில் தொடர்ந்து நின்று கொண்டிருக்கின்றது.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

நாங்கள் அனைவரும், எனது நல்ல நண்பர்கள் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் உட்பட, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் நண்பர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட, நாங்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தியது, இந்த இலங்கைத்

தீவிலே எண்ணிக்கையில் சிறுபான்மை இனமாக உள்ள எமது இனத்திற்கு, தமிழ்த் தேசிய இனத்திற்கு கௌரவமும் கண்ணியமும் மிக்க ஓர் அமைதி வாழ்வினை அமைத்துக் கொடுப்பதற்காகவே!

சுதந்திர இலங்கையில் எமது இனத்திற்கு அளிக்கப்பட்ட அந்தஸ்த்து, பிரஜா உரிமைச்சட்டங்கள் மூலம் சுதந்திரம் அடைந்த ஒரு வருடத்துக்குள்ளேயே கிடைத்த அனுபவம் தொடர்ந்து சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் கிடைத்த அதிர்ச்சி, அரசியல் நீதி கோரி எமது இனத்தின் மதிப்பிற்குரிய தலைவர்களால் தலைமை தாங்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் எல்லாம் அடக்கு முறையால் ஒடுக்கப்பட்ட அக்கிரமங்கள், எமது மக்கள் மீது தென் இலங்கையில் கட்டவீழ்த்து விடப்பட்ட வன்முறைக் கொடுமைகள் அனைத்தும் ஒன்று திரண்டு, இளம் தமிழ் சமுதாயத்தை அன்று ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளின.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

அகிம்சை போராட்டம் நடாத்தியபோது தாக்கப்பட்டதன் காரணமாக, அன்றைய கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி.வன்னியசிங்கமும், அன்றைய ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஏ.கந்தையாவும் முறையே 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதியும், 1963ம் ஆண்டு ஆனி மாதம் 4ந் திகதியும் அகால மரணமடைந்த சம்பவங்கள் எமது வரலாற்றில் மறக்கப்பட முடியாதவை.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

எமது தலைவர்களுடன் காலத்துக்கு காலம் செய்து கொள்ளப்பட்ட அரசியல் ஒப்பந்தங்கள் கிழித்து எறியப்பட்டன. எமது தலைவர்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டார்கள்.

தமிழ் இனத்தின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாபெரும் தலைவராக, தொடர்ந்து 21 ஆண்டுகள் திகழ்ந்த ஈழத்துக் காந்தி எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுடன் 1957ல் பிரதமர் பண்டாரநாயக்காவும், 1960ல் ஸ்ரீமா பண்டாரநாயக்க அவர்களும், பின்னர் 1965ல் டட்லி சேனநாயக்க அவர்களும் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகள் உதாசீனம் செய்யப்பட்டன.

இந்த வரலாறுதான், ஐக்கிய இலங்கை மீது எமது அரசியல் தலைவர்களும் மக்களும் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தது!

**தமிழீழக் கோரிக்கை எழுந்தது!**

ஆனாலும் இந்த கோரிக்கையை 1959ல் அன்றைய வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கமும், அவரைத் தொடர்ந்து 1968ல் அன்றைய ஊர்காவற்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினமும் முன்வைத்து நின்ற போது நிராகரித்த எமது மக்கள், 1972ல் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் சாசனத்தின் கீழ் எமது மொழியும் மதங்களும் இரண்டாம் இடத்திற்கு அரசியல் சாசன ரீதியாக ஒதுக்கித் தள்ளப்பட்ட போது, அந்த இலட்சியத்தை பற்றிப் பிடிக்க முன்வந்தார்கள்.

இந்த சூழ் நிலையில்தான், 1972ம் ஆண்டு அரசியல் சாசனத்தை ஆதரித்து நின்ற, இந்த சபையின் அன்றைய நல்லூர் உறுப்பினர் அருளம்பலம், வட்டுக்கோட்டை உறுப்பினர் தியாகராஜா, யாழ்ப்பாண உறுப்பினர் மாட்டின், மட்டக்களப்பின் இரண்டாவது உறுப்பினர் ராஜன் செல்வநாயகம், நியமன உறுப்பினராகவும் மந்திரியாகவும் இருந்த குமாரசூரியர், இன்னும் ஓர் நியமன உறுப்பினர் எம் சி.சுப்பிரமணியம் ஆகியோரை துரோகிகள் என எமது மக்கள் முத்திரை குத்தினார்கள்.

ஆயுதப் போராட்டம் முளை விட்டது. சிவகுமாரன்களும் தங்கத்துரைகளும் குட்டிமணிகளும் பிரபாகரன்களும் உமாமகேஸ்வரன்களும் தோன்றினார்கள்!

1977 பொதுத் தேர்தலில் மாபெரும் மக்கள் ஆணை, தமிழீழ இலட்சியத்தை முன்வைத்து வடகிழக்கு முழுவதும் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எமது மக்களால் வழங்கப்பட்டது.

அந்த தேர்தலைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஜயவர்த்தன அரசாங்கத்தின் முதலாவது மாதத்திலேயே தென் இலங்கையில் எமது

மக்கள் மீது வன்முறைத் தாக்குதல் அரசாங்க ஆதரவுடன் தொடுக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் சாசனத்திலும் எமது மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே மதிக்கப்பட்டார்கள். ஆயினும் அந்த அரசியல் சாசனத்தை ஆதரிக்கவும் மானம் ரோசமற்ற தமிழர்கள் ஓரிருவர் இந்த சபையிலே இருக்கத்தான் செய்தார்கள்.

1981லே, யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலின் போது அரச வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டது. 5 லட்சம் நூல்கள் தீக்கிரையாகின.

1983லே கறுப்பு யூலையின் போது, வரலாறு காணாத வன்முறைக்கு எமது மக்கள் தென் இலங்கையில் இரையாக்கப்பட்டனர்.

வெலிக்கடைச் சிறையில் திட்டமிட்டு தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் எமது இயக்க முன்னணித் தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன் சிவபாதம், ஸ்ரீகுமார், நடேசுதாசன், குமார் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

இந்த பின்னணியில் வீறு கொண்டெழுந்த தமிழீழ விடுதலைப் போராட்டம், 1987லே, நான் முன்பு குறிப்பிட்டது போல, இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு வழியமைத்தது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனத்தின் 13 வது திருத்தம் வெறும் காகிதத்தோடு முடக்கப்பட்டது. அன்றைய வடகிழக்கு மாகாண முதல் அமைச்சர் வரதராஜப் பெருமாள் பல தடவைகள் கொழும்புக்கு வந்து படியேறிப் பார்த்தும் எதுவுமே நடக்கவில்லை!

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

1994ம் ஆண்டிலே பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம் ஆறாண்டு காலத்தின் முடிவிலே இந்த புதிய அரசியல் சாசனத்தை இப்போது சமர்ப்பித்திருக்கின்றது.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

வரலாறு மீண்டும் நிகழ்கிறது என்பது ஓர் பழமொழி. இந்தப் பழமொழிதான் இப்போது என் ஞாபகத்துக்கு வருகின்றது.

**இந்த அரசியல் சாசனத்திலே என்ன இருக்கின்றது?**

சுதந்திரத் தமிழ் ஈழம் கோரிப் போராடிய நாம் ஐக்கிய இலங்கையை ஏற்று நிற்கின்றோம். இந்த ஐக்கியப்பட்டு இருக்க வேண்டும் என்பது எமது மக்களின் ஆசை. எதிர்பார்ப்பும் கூட.

எமது மக்களின் இந்த அபிலாஷைக்கு இந்த அரசியல் சாசனத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கின்றதா?

எம் மதமும் சம்மதம் என்பது தமிழர் பண்பாடு. இந்த இலங்கைத் தீவில் பல்வேறு மதங்கள் பின்பற்றப்படுகின்றன. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் மத்தியிலே இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, கத்தோலிக்க மதங்கள் பின்பற்றப்படுகின்றன. எமது மொழியைப் போல மதத்தையும் நாம் நேசிக்கின்றோம்.

புதிய அரசியல் சாசனத்தின் கீழ் பௌத்த மதத்தைப் போலவே எமது மதங்களையும் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கின்றதா?

இந்த நாட்டின் அரசு - அரசாங்கம் அல்ல - அரசு என்பது ஒற்றைத் தன்மை கொண்டதாக இருக்கக் கூடாது. பல்வேறு இனங்கள் வாழும் பல நாடுகளில் உள்ளது போல இணைப்புத் தன்மை கொண்டதாக - இணைப்பு அரசாக - சமிஷ்டி அரசாக அமைய வேண்டும் என்றுதான் 1977 வரையிலே எமது மக்கள் கோரி வந்தார்கள். மீண்டும் கடந்த பல ஆண்டுகளாக குறிப்பாக 1987க்குப் பிறகு கோரி

வருகிறார்கள்.

இந்தக் கோரிக்கையை புதிய அரசியல் சாசனம் உள்ளடக்கியிருக்கிறதா?

சுதந்திர தமிழ் ஈழத்திற்குப் பதிலாக, ஐக்கிய இலங்கையை எமது மக்கள் ஏற்றுக்கொள்ளும் போது, அந்த ஐக்கிய இலங்கைக்குள்ளே தமது விவகாரங்களை தமது தாயகத்தில் தாமே கவனித்துக் கொள்ளவும், கையாளவும் விரும்புகிறார்கள்.

இவ்விதம் கையாள்வதன் மூலந்தான், எமது தாயகத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அவர்கள் கருதுகின்றார்கள் - நம்புகின்றார்கள்.

எமது மக்களுக்கு பாதுகாப்பான வாழ்விடம் எமது மரபு வழித் தாயகம் மட்டுமே என்பதை 1958, 1977, 1983 ஆண்டுகளில் தென் இலங்கையில் அவர்கள் சந்தித்த கோரங்களின் கொடுமைகளின் ஞாபகங்கள் தொடர்ந்து உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன.

எமது தாயகத்தினை நிர்வகிக்கவும், பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்யவும், நவீன மயப்படுத்தவும், அமைதி தவழும் நிம்மதியான வாழ்க்கையை எமது எதிர்கால சந்ததிகளுக்கு அங்கே உறுதிப்படுத்தவும் போதிய - பூரணமான அதிகாரங்கள் சகல துறைகளிலும் தமக்கு வேண்டும் என்று எமது மக்கள் உணர்கின்றார்கள்.

இக்காரணங்களினால், பூரணமான சுயாட்சி எமது தாயகத்திற்கு வழங்கப்பட முடியும் என்று அவர்கள் கூறி நிற்கின்றார்கள்.

எமது மக்கள் விரும்புகின்ற இந்த சுயாட்சியை புதிய அரசியல் சாசனம் எமது மக்களுக்கு வழங்குகின்றதா?

திட்டமிட்ட அரச குடியேற்றத் திட்டங்களினால், எமது

தயாகத்தின் பிரிக்கப்பட முடியாத பகுதியான கிழக்கு மாகாணத்தில், எமது பாரம்பரிய பூமி பறித்தெடுக்கப்பட்டதனால், அங்கே எமது தமிழ் மக்களின் பலம் 49 வீதத்திலிருந்து 40 வீதமாக வீழ்ச்சி கண்டிருப்பதையும், தமிழ் பேசும் எமது முஸ்லிம் சகோதரர்களின் பலம் 42 வீதத்திலிருந்து 31 வீதமாக வீழ்ச்சி கண்டிருப்பதையும் மனதில் கொண்டு, அரச காணிகள் அனைத்தும் பிராந்தியங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் எமது பாரம்பரிய பூமி பாதுகாப்பாக எமது கைகளில் இருக்கும் என்று எமது மக்கள் உறுதியான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள்.

**இந்த அபிப்பிராயத்தை புதிய அரசியல் சாசனம் அங்கீகரிக்கின்றதா?**

எமது பாரம்பரிய பூமி திட்டமிட்டு எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட காரணத்தினால், அதன் கிழக்கு பிரதேசத்தில் சனத்தொகையின் இன விகிதாசாரத்தை, ஓரளவுக்காவது, நடைமுறைச் சாத்தியமான வழியிலே, சுதந்திர இலங்கைத் தீவின் முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்ற 1953ம் ஆண்டின் நிலைமைக்கும் நிலவரத்திற்கும் கொண்டு வரக்கூடிய விதத்தில் ஏற்பாடுகள் வேண்டும். இதன் மூலமே எமக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதி ஓரளவுக்காவது நிவர்த்திக்கப்படும் என்றும் எமது மக்கள் கருதுகின்றார்கள்.

இவ்விடயம் தொடர்பாக புதிய அரசியல் சாசனம் கவனம் செலுத்தியிருக்கின்றதா?

வன விலங்குகளும் விஷ ஜந்துக்களும் கோலோச்சிய மலை நாட்டின் காடுகளை அழித்து, கருங்கல் மலைகளைக் குடைந்து, பாதைகள் அமைக்கவும், தேயிலை, றபர் தோட்டங்களை உருவாக்கவும், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் லட்சக்கணக்கிலே தமது உயிர்களை உருவாக்கவும், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் லட்சக்கணக்கிலே தமது உயிர்களை விலையாக்கிய இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் பிரச்சனையில், ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டு, இந்தியப் பிரஜாவுரிமை கிடைக்கப் பெற்ற நிலையிலே தொடர்ந்தும் இந்த நாட்டிலே, தாம் பிறந்த பொன்னாட்டிலே

வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் ஒரு லட்சம் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நீதி வழங்க புதிய அரசியல் சாசனம் வழி அமைக்கின்றதா?

ஒட்டு மொத்தமாகச் சொல்வதானால், இலங்கைத் தீவில் வாழும் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய அபிலாஷைகளை இந்த அரசியல் சாசனம் திருப்திப்படுத்துகின்றதா?

இந்தக் கேள்விகள் அனைத்தும் இனப்பிரச்சனையின் அடிப்படையுடன் இணைந்திருப்பவை, பின்னிப் பிணைந்திருப்பவை. இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் விடை ஒன்று தான்!

**அது - இல்லை - இல்லை - இல்லை என்பதுதான்!**

எனவே தான், இந்த புதிய அரசியல் சாசனத்தை எமது இனத்தின் சார்பில், சுதந்திர தமிழ் ஈழத்திற்கான போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த நிலையிலும் கூட, ஐக்கிய இலங்கைக்குள்ளே நீதியானதோர் அரசியல் தீர்வின் ஊடாக இனப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள தயாராக உள்ள எமது இனத்தின் சார்பில், திட்டவட்டமாகவும், தெட்டத் தெளிவாகவும் நிராகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமையில் நான் இருக்கின்றேன்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

நீண்ட காலமாக அரசியல் நீதி கோரி நிற்கும் எமது மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை புதிய அரசியல் சாசனம் அங்கீகரிக்கவுமில்லை அனுசரிக்கவுமில்லை.

எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு உரிய உகந்த தீர்வு இதிலே கிடையாது. இனப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமான பேரினவாதத்தின் அதிகாரப் பிடியைப் பாதுகாப்பதில் புதிய அரசியல் சாசனம் முனைப்பாக இருப்பது தெட்டத் தெளிவானது.

இந்த சாசனத்தின் முதலாம் பிரிவும் ஏழாம் பிரிவும் பேரினவாதத்தின் அதிகாரப் பிடியைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளன என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

இணைப்பாட்சி கொண்டதும் மதச்சார்பற்றதுமான ஓர் ஐக்கிய இலங்கைக்குள், தமிழ்த் தேசிய இனத்திற்கு அதன் மரபு வழித் தாயகத்தில் சுயாட்சியை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கட்டி, தொடரும் போரின் அடிப்படைக் காரணத்தையும் அகற்றி, அழகு மிக்க இந்த சொர்க்கத் தீவில் அமைதி தவழும் ஓர் நவீன நாட்டினைக் கட்டி எழுப்புவதற்கு அடித்தளம் இடுவதற்குப் பதிலாக, இனப் பிரச்சினையை தொடர்ந்தும் எரியும் பிரச்சனையாக வைத்திருக்கவே இந்த புதிய அரசியல சாசனம் உதவு முடியும்.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

இந்த அரசியல் சாசனத்தை சுயமரியாதை கொண்ட எந்தத் தமிழ் மகனும் ஏற்க முடியாது ஆதரிக்க முடியாது.

எத்தனையோ துன்ப துயரங்களை சந்தித்து விட்ட எமது மக்கள், இனப்பிரச்சினைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான தீர்வினையே நாடி நிற்கின்றார்கள்.

அரசியல் நீதி கோரி எமது மக்கள் இதுவரை கொடுத்திருக்கும் விலைக்கு ஈடான, காத்திரமான தீர்வு கட்டாயமாக வேண்டும்.

எமது மக்களின் நம்பிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கம் நாம் துரோகம் இழைக்க முடியாது. எமது மக்களின் முதுகில் நாம் குத்த முடியாது. அவர்களைக் காட்டிக்கொடுக்க முடியாது.

அற்ப சொற்ப சலுகைகளுக்காக சுகங்களுக்காக எமது இனத்தை விலை பேசிய துரோகிகள் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள்ளே தூக்கி எறியப்பட்டதை கடந்த காலம் சந்தித்திருக்கிறது. இதை எவரும் மறந்து விடக்கூடாது.

**கௌரவ அவைத் தலைவர் அவர்களே!**

புதிய அரசியல் சாசனத்தை எனது மக்களின் சார்பில் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் தீவிரமாகவும் உறுதியாகவும் எதிர்க்கின்றேன் என்பதை தெரிவித்துக் கொண்டு நன்றி கூறி அமர்கின்றேன்.

X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|